மனிதக் கடத்தல் வழக்குகளில் பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு தொடர்பான கொள்கை வழிகாட்டி

மனிதக் கடத்தல் பற்றிய வழக்குகளில் நிதி விசாரணைக் கருவிகளைப் பயன்படுத்துவது குறித்த தொழில்வல்லுநர்களுக்கான அறிமுக வழிகாட்டி

இந்தக் கொள்கை வழிகாட்டியை நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு (ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற ஒப்பந்தம்) எதிரான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்திலும், அதன் இரண்டு துணை உடன்படிக்கை மூல வரைவுகளான நிலம், கடல் மற்றும் காற்று மூலமாக புலம்பெயர்கிறவர்களை கடத்துவதற்கு எதிரான உடன்படிக்கையிலும்; மற்றும் நபர்களை, குறிப்பாகப் பெண்களையும் குழந்தைகளையும் கடத்தலைத் தடுப்பதற்கும், அடக்குவதற்கும், தண்டிப்பதற்குமான உடன்படிக்கையிலும் கையெழுத்திடாத மற்றும்/அல்லது ஒப்புதல் அளிக்காத நாடுகள் உட்பட அனைத்துப் பாலி செயன்முறை நாடுகளும் பயன்படுத்தலாம். இந்தக் கொள்கை வழிகாட்டியில் பயன்படுத்தப்படும் சொற்கள் இந்த மூன்று சர்வதேச கருவிகளுடன், முடிந்தவரை ஒத்துப்போகின்றன. எவ்வாறாயினும், மொழிபெயர்ப்பு நோக்கங்களுக்காக, ஒப்பந்தத்தின் உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்பும் அதன் உடன்படிக்கை மூலவரைவும் இந்தக் கொள்கை வழிகாட்டியில் பயன்படுத்தப்படும் சொற்களஞ்சியத்திற்கான அங்கீகார விடயங்களாக ஆலோசிக்கப்பட வேண்டும்.

ஆட்கடத்தல் வியாபாரம், மனிதக் கடத்தல் மற்றும் அது தொடர்பான நாடுகடந்த குற்றங்கள் (பாலி செயன்முறை) பற்றிய பாலி செயன்முறை 2002 இல் நிறுவப்பட்டது. இது அவுஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியா அரசாங்கங்களின் இணைத் தலைமையில் 45 க்கும் மேற்பட்ட உறுப்பு நாடுகளையும் நிறுவனங்களையும் உள்ளடக்கிய ஒரு தன்னார்வ மற்றும் சட்டத்தினால் கட்டுப்படாத பிராந்திய ஆலோசனை செயன்முறையாகும்.

இந்தக் கொள்கை வழிகாட்டியைப் பற்றிய கேள்விகள் பிராந்திய ஆதரவு அலுவலகத்திற்கு (ஆர்.எஸ்.ஓ) பாலி செயன்முறைக்கு அனுப்பப்பட வேண்டும்:

மின்னஞ்சல்: info@rso.baliprocess.net

ஆர்.எஸ்.ஓ வலைத்தளம்: www.baliprocess.net/regional-support-office

2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிடப்பட்டது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கிராஃபிக் வடிவமைப்பு உள்நாட்டலுவல்கள் திணைக்களம்.

நன்றியுரை

பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட பாலி செயன்முறை கொள்கை வழிகாட்டி வரைவுக் குழுவின் தலைமையில் இந்த கொள்கை வழிகாட்டியை பாலி செயன்முறை உறுப்பினர்கள் உருவாக்கியுள்ளனர்:

யூஸ்ஃபிட்லி அத்யக்ஷனா,
நாடுகடந்த சொத்து மீட்பு தொடர்பான துணைத் தலைவர் II,
சொத்து மீட்பு நிலையம் (பிபிஏ), சட்டமா அதிபர் அலுவலகம்,
இந்தோனேசியா (இணைத் தலைவர்)

கீரன் பட்லர்,
ஆலோசகர் (சட்ட), நாடுகடந்த குற்றப்பிரிவு,
உள்நாட்டலுவல்கள் திணைக்களம், அவுஸ்திரேலியா (இணைத் தலைவர்)

எம்.டி மோஸ்லெம் அலி பிபிஎம் (பார்),
மேலதிக காவல்துறை அத்தியகட்சகர். சிறப்புக் குற்றம் (காவல்துறைத் தலைமையகம்),
பங்களாதேஷ் காவல்துறை, பங்களாதேஷ்

மரியா ரோசனி ஃபாங்கோ,
சிறப்பு உதவியாளர்,
புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான துணை செயலாளர் அலுவலகம்,
வெளியுறவுத் திணைக்களம், பிலிப்பைன்ஸ்

ஹேசல் ஜாய் பனோங்,
சட்ட அதிகாரி,
புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான துணை செயலாளர் அலுவலகம்,
வெளியுறவுத் திணைக்களம், பிலிப்பைன்ஸ்

சோன்டிகா டவருவாங்,
வழக்கு பிரிவு பணிப்பாளர்
பணத்தூய்தாக்கலுக்கெதிரான அலுவலகம், தாய்லாந்து

சிரியட் வீக்,
சிரேட்ட புலனாய்வாளர், சர்வதேச ஒத்துழைப்பு பிரிவு
பணத்தூய்தாக்கலுக்கெதிரான அலுவலகம், தாய்லாந்து

கிறிஸ் பாட்,
பணத்தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத ஆலோசகரின் எதிர் நிதியளிப்பு
போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அலுவலகம்

மைக்கேல் பெட்டி,
சட்ட அமுலாக்க ஆலோசகர்,
பணத்தூய்தாக்கலுக்கெதிரான உதவி குழு,
உள்நாட்டலுவல்கள் திணைக்களம், அவுஸ்திரேலியா

ரெபேக்கா மில்ஸ்,
உதவிப் பணிப்பாளர்,
ஆட்கடத்தல் மற்றும் மனிதக் கடத்தல் பிரிவு,
உள்நாட்டலுவல்கள் திணைக்களம், அவுஸ்திரேலியா

இந்தக் கொள்கை வழிகாட்டியைப் பற்றிய கேள்விகளை **bali.process.tipwg@homeaffairs.gov.au** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்

முன்னுரை

2002 ஆம் ஆண்டு இந்த அமைப்பு தொடங்கப்பட்டதிலிருந்து, ஆட்கடத்தல் வியாபாரம், மனிதக் கடத்தல் மற்றும் அது தொடர்பான நாடுகடந்த குற்றங்கள் பற்றிய பாலி செயன்முறை (பாலி செயன்முறை) ஆட்கடத்தல் வியாபாரம், மனித கடத்தல் மற்றும் அது தொடர்பான நாடுகடந்த குற்றங்கள் என்பனவற்றின் விளைவுகள் குறித்து பிராந்திய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதுடன் உத்திகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்கி செயற்படுத்தியது பதிலளிக்கும் ஒத்துழைப்பு நடவடிக்கையையும் மேற்கொண்டது. இந்தோனேசியா மற்றும் அவுஸ்திரேலியாவின் இணைத் தலைமையில், பாலி செயன்முறையில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் (யு.என்.எச்.சி.ஆர்), இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (ஐ.ஓ.எம்) மற்றும் ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகம் (யு.என்.ஓ.டி.சி) உட்பட 48 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். அத்துடன் பல பார்வையாளர் நாடுகள் மற்றும் சர்வதேச முகவர் நிலையங்கள் என்பனவும் உள்ளன.

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஆறாவது பாலி செயன்முறை பிராந்திய அமைச்சர் மாநாட்டில், பணத்தூய்தாக்கலையும் அக் குற்றங்களின் வருமானத்தையும் குற்றச்செயலாக கருதுவதற்கான நாடுகளின் கடப்பாட்டின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டதுடன் ஆட்கடத்தல் வியாபாரம் மற்றும் மனிதக் கடத்தல் ஆகியவற்றிற்கான நிதி சலுகைகளை இலக்காகக் கொள்வதற்கான நாடுகளின் கடப்பாட்டின் முக்கியத்துவம் பற்றியும் அமைச்சர்கள் குறிப்பிட்டனர். மேலும் பாலி செயன்முறை செயற்குழு மனித கடத்தல் பற்றிய (பணிக்குழு) பயிற்சி அளித்தல் மற்றும் இந்த தலைப்பில் பிராந்திய வழிகாட்டுதல்களை உருவாக்குதல் வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, 2016 ஆம் ஆண்டு மே மாதம், பணிக்குழுவானது மணி போரத்தைத் தொடர்ந்து பாலி செயன்முறையை நடத்தியதுடன் மனிதக் கடத்தல் பற்றிய வழக்குகளில் நிதி விசாரணைக் கருவிகளைப் பயன்படுத்துவது தொடர்பான பிராந்திய கொள்கை வழிகாட்டி (வழிகாட்டி) மற்றும் தொடர்புடைய பயிற்சித் தொகுதியை பணிக்குழு உருவாக்க வேண்டும் எனப் பரிந்துரைத்தது.

2016 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற அதன் இரண்டாவது வருடாந்த கூட்டத்தில், செயற்குழுவானது *2016–17 ஆம் ஆண்டிற்கான தனது முன்னோக்கிய பணித் திட்டத்தின் கீழ்* இந்த பரிந்துரையை முன்னெடுப்பதற்கு ஒப்புக் கொண்டதுடன், வழிகாட்டியை வடிவமைக்க இந்தோனேசியா மற்றும் அவுஸ்திரேலியா குடியரசின் அரசாங்கங்களின் தலைமையில் ஒரு வரைவுக் குழுவை அமைத்தது. இந்த வரைவுக் குழுவில் அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மற்றும் போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் (யு.என்.ஓ.டி.சி) ஆகிய நாடுகளில் இருந்து பணத்தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் மனித கடத்தல் பற்றிய வல்லுநர்கள் இருந்தனர். வழிகாட்டி பற்றிய வரைவு பதிப்புகள் தொடர்பில் தமது கருத்துகளைப் பதிவிடுவதற்காக பாலி செயன்முறை உறுப்பினர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு அவை வழங்கப்பட்டதுடன் குறித்த பதிப்புகள் இந்தோனேசியாவின் பாலி நகரில் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 23-24 ஆம் திகதிகளில் நடைபெற்ற முழு பாலி செயன்முறை ஆலோசனை பட்டறையில் விவாதிக்கப்பட்டன. வழிகாட்டி பின்னர் நிறைவு செய்யப்பட்டதுடன் அதற்கு ஒக்டோபர் 2017 இல் பாலி செயன்முறை தற்காலிக குழுவின் சிரேட்டஅதிகாரிகள் கூட்டத்தில் ஒப்புதல் அளித்தது.

இந்த வழிகாட்டி தன்னார்வமானது, சட்டத்தால் கட்டுப்படாதது மற்றும் பாலி செயன்முறை உறுப்பு நாடுகளில் மனிதக் கடத்தல் பற்றிய வழக்குகளில் மனிதக் கடத்தலில் ஈடுபடுவோரை விசாரித்தல் மற்றும் வழக்குத் தாக்கல் செய்வதற்குப் பொறுப்பான சட்டம் மற்றும் நீதித்துறை அதிகாரிகளுக்கான குறிப்பு கருவியாக கருதப்படுகின்றது.

சுருக்கெழுத்துக்களும் சுருக்கங்களும்

ஏ.ஆர்.ஐ.என்-ஏ.பீ.	சொத்து மீட்பு ஊடாடும் குழுமம் - ஆசியா பசிபிக்
ஏ.எஸ்.ஈ.ஏ.என்	தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கம்
பாலி செயன்முறை	ஆட்கடத்தல் வியாபாரம், மனிதக் கடத்தல் மற்றும் அது தொடர்பான நாடுகடந்த குற்றங்கள் பற்றிய பாலி செயன்முறை
எப்.ஏ.ரீ.எப்	நிதி சார்ந்த நடவடிக்கைப் பணிக்குழு
நி.உ.பி	நிதி சார்ந்த உளவுத்துறைப் பிரிவு
ஐ.எல்.ஓ	சர்வதேச தொழிலாளர் அமைப்பு
ஐ.ஓ.எம்	இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு
எம்.ஓ.யு	புரிந்துணர்வு ஒப்பந்தம்
என்.ஜி.ஓ	அரச சார்பற்ற அமைப்பு
ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற மாநாடு	நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தம்
ஆர்.எஸ்.ஓ	பாலி செயன்முறையின் பிராந்திய ஆதரவு அலுவலகம்
மனிதக் கடத்தல் நெறிமுறை	குறிப்பாகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின் கடத்தலைத் தடுப்பதற்கும், அடக்குவதற்கும், தண்டிப்பதற்குமான உடன்படிக்கை மூலவரைவு நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்துக்குத் துணைபுரிகின்றது
ஐ.நா.	ஐக்கிய நாடுகள் தாபனம்
யு.என்.எச்.சி.ஆர்	அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர்
யு.என்.ஓ.டி.சி	போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அலுவலகம்

பொருளடக்கம்

நிறைவேற்றுச் சுருக்கம் 4

பிரிவு 1: காரண விளக்கம் 6

1.1 'பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு' என்றால் என்ன? 6

1.2 பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு அணுகுமுறை ஏன் தேவைப்படுகின்றது? 6

1.3 மனிதக் கடத்தல் எவ்வளவு பண மதிப்புள்ளது? 7

1.4 ஒரு புதிய சிந்தனை வழி-வாய்ப்புகளும் சவால்களும் 7

1.5 வழக்கு ஆய்வு 8

பிரிவு 2: சட்ட கட்டமைப்புகள் 9

2.1 சர்வதேச தரநிலைகள் 9

2.2 பாரிய பணத்தூய்தாக்கல் குற்றங்கள் 9

2.3 பயனுள்ள சொத்து பறிமுதல் கட்டமைப்புகள் 10

2.4 என்ன சொத்துக்களைத் தடுத்துவைக்கவும் மீட்டெடுக்கவும் முடியும்? 11

பிரிவு 3: மனிதக் கடத்தலுடன் தொடர்புடைய பணத்தூய்தாக்கல் முறைகள் 12

3.1 பணம் எவ்வாறு தூய்தாக்கப்படுகின்றது? 12

3.2 பொதுவான பணத்தூய்தாக்கல் முறைகள் 13

3.3 மனிதக் கடத்தல் சம்பவங்களில் பணத்தூய்தாக்கல் 14

பிரிவு 4: நிதி சார்ந்த புலனாய்வு அலகுகள் (நி.உ.பி.) 15

4.1 பணத்தூய்தாக்கல் நடவடிக்கையை அரசாங்கம் எவ்வாறு இனங்காணுகின்றது? 15

4.2 நி.உ. பிரிவுகள் என்ன செய்கின்றன? 16

4.3 உங்களின் புலனாய்வுக்கு உங்கள் நி.உ.பி. எவ்வாறு உதவ முடியும்? 16

4.4 வழக்கு ஆய்வு 18

பிரிவு 5: புலனாய்வு 20

5.1 ஒரு நிதிப் புலனாய்வு என்றால் என்ன? 20

5.2 பணம் எப்படி, எங்கு நகர்ந்துள்ளது என்பதை உங்களால் எவ்வாறு நிரூபிக்க முடியும்? 20

5.3 தகவல்களையும் சான்றுகளையும் சேகரித்தல் 21

5.4 வழக்கு ஆய்வு 24

பிரிவு 6: சர்வதேச ஒத்துழைப்பு 25

6.1 சர்வதேச ஒத்துழைப்பு ஏன் முக்கியமானது? 25

6.2 நிதி விசாரணைகளை ஆதரிக்க பொதுவாக பயன்படுத்தப்படும் சர்வதேச ஒத்துழைப்பின் முறைமைகள் 25

6.3 முக்கியமான பரிசீலனைகள் 26

பிரிவு 7: புதிய கட்டண முறைகள் 28

பிரிவு 8: உதவிக்குறிப்புகளின் சுருக்கம் 29

நிறைவேற்றுச் சுருக்கம்

மனிதக் கடத்தலானது கடுமையான மனித உரிமை தாக்கங்களைக் கொண்ட கடுமையான குற்றமாகும். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களின் மிகவும் இலாபகரமான வணிக மாதிரிகளில் இதுவும் ஒன்றாகும். இது உலகளாவிய சட்டவிரோத வருமானத்தின் இரண்டாவது பெரிய ஆதாரமாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இதற்கு போதைப்பொருள் கடத்தல் வருமானம் மட்டுமே விஞ்சியதாகக் காணப்படுகின்றது.[1] வலுக்கட்டாய உழைப்பும் மனிதக்கடத்தலும் உலகளாவிய ரீதியில் ஆண்டுக்கு 150 பில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டும் தொழிலாகும் என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு மதிப்பிடுகின்றது.[2]

மனிதக் கடத்தல் பரவலாகக் காணப்படுகிறதையும் அதன் கடுமையான தாக்கங்களையும் கூடுதலாக அங்கீகரித்த போதிலும், உலகளாவிய தண்டனை விகிதங்கள் குறைவாகவே உள்ளன. பணத்தைப் பின்தொடர்வது சட்டவிரோத இலாபங்களின் ஓட்டத்தைக் கண்டறியவும், குற்றவாளிகளையும் பாதிக்கப்பட்டவர்களையும் அடையாளம் காணவும், வழக்குகளுக்கு உதவக்கூடிய ஆதாரங்களைச் சேகரிக்கவும், மற்றும் சட்டவிரோத இலாபங்களின் குற்றவியல் வலையமைப்புகளை இல்லாமல் செய்யச் சொத்துக்களைக் கைப்பற்றவும் உதவும். பணத்தூய்தாக்கத்திற்கான எதிர்ப்பு மற்றும் சொத்து மீட்பு நுட்பங்களைப் பயன்படுத்தி ‘பணத்தைத் தொடர்தல்’ அணுகுமுறையை இணைப்பதன் மூலம் மனிதக் கடத்தலுக்கான சட்ட அமுலாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான வழிகளை இந்தக் கொள்கை வழிகாட்டி உள்ளடக்கியுள்ளது.

நிதி நடவடிக்கை பணிக்குழுவினால் (எப்ஏரீஎப்) குறித்துரைக்கப்பட்டதும் மற்றும் பல ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தங்களில் அடங்கியதுமான பணத்தூய்தாக்கல் மற்றும் குற்றத்தின் வருமானத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அரசுகளுக்கு கடப்பாடுகள் உள்ளன. விரிவான பணத்தூய்தாக்கல் குற்றங்களைச் செயற்படுத்த வேண்டியதன் அவசியமும், குற்றத்தின் வருமானத்தை முடக்குவதற்கும், பறிமுதல் செய்வதற்கும், அரசுடைமையாக்குவதற்கும் ஒரு ஆற்றல் வாய்ந்த ஆட்சியை நிறுவுதல் ஆகியவை இதில் அடங்கும்.

இந்தக் கொள்கை வழிகாட்டி பாலி செயன்முறை உறுப்பு நாடுகளின் அனுபவங்களால் அறிவிக்கப்பட்ட மனித கடத்தல் குற்றவியல் குழுமத்தினால் மேற்கொள்ளப்படும் மனிதக் கடத்தல் மற்றும் பணத்தூய்தாக்கல் பற்றிய பொதுவான வழிமுறைகளை விவரிக்கின்றது. ‘பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு’ அணுகுமுறையை ஆதரிப்பதில் நிதி உளவுத்துறைப் பிரிவுகளின் (FIUs) முக்கிய பங்கை உணர்ந்து, வழிகாட்டி சட்டம் மற்றும் நீதி நிறுவனங்கள் மற்றும் நி.உ.பிரிவுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான உதவிக்குறிப்புகளை வழங்குகின்றது. சிறந்த ஒத்துழைப்பு வழிமுறைகள் மற்றும் வழக்கு ஆய்வுகள் மூலம் சர்வதேச ஒத்துழைப்பு வழிமுறைகளைப் பயன்படுத்துவது உட்பட நிதி விசாரணையை நடத்துவதற்கான முக்கிய கட்டங்களையும் இந்த வழிகாட்டி மேற்கொள்கின்றது.

மனிதக் கடத்தல் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கு தொழில்வல்லுநர்கள் பயன்படுத்தும் கருவித்தொகுப்பை விரிவாக்குவதற்காக இந்தக் குற்றம் இலாபத்தால் இயக்கப்படுகின்றது என்ற பொருளாதார யதார்த்தத்தை குறிவைப்பதன் ஊடாகச் செயல்படுத்துபவர்களுக்கு உதவுவதெற்கென இந்த வழிகாட்டி ஒரு மேற்கோள் குறிப்பாக வழங்கப்படுகின்றது. இது பாலி செயன்முறைக்கான ஒரு புதிய கருத்து மையமாகும், மேலும் நாடுகடந்த குற்றங்களை தடுப்பதற்கும், குற்றவாளிகள் எதை அதிகம் மதிப்பிடுகிறார்கள் என்பதை குறிவைத்து நிதி விசாரணைக் கருவிகளைப் பயன்படுத்துவதன் ஊடாக உலகளாவிய அங்கீகாரத்துடன் ஒத்துப்போகின்றது.[3]



1 http://digitalcommons.ilr.cornell.edu/cgi/viewcontent.cgi?article=1016&context=forcedlabor

2 http://www.ilo.org/wcmsp5/groups/public/---ed_norm/---declaration/documents/publication/wcms_243391.pdf

3 உதாரணமாக, ஐ.நா.பாதுகாப்பு அவை 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் திகதி மனிதக கடத்தல் மற்றும் அடிமைத்தனம் குறித்த தனது முதல் தீர்மானத்தை (2331) வெளியிட்டது. இது எப்ஏரீஎப், எப்ஏரீஎப்-வகையிலான பிராந்திய அமைப்புகள் மற்றும் அரசுகளை மனிதக் கடத்தல் மற்றும் நவீன அடிமைத்தனத்துடன் தொடர்புடைய நிதி ஓட்டங்களை சீர்குலைக்கும் முயற்சிகளை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான ஊக்குவிப்பை வழங்கியது.

பிரிவு 1: காரண விளக்கம்

1.1 ‘பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு’ என்றால் என்ன?

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தின் உயிர்நாடி பணம். காலப்போக்கில், குற்றம் மிகவும் அதிநவீன மற்றும் சர்வதேச இயல்புடையதாக மாறியுள்ளதுடன் குற்றவாளிகள் தொடர்ந்து குற்றத்தின் வருமானத்தை மறைக்க புதிய வழிகளைக் கண்டுபிடித்து வருகின்றனர். இதற்கு பதிலளிக்கும் விதமாக, தீவிரமான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களை எதிர்த்துப் போராடுவதற்கு சட்டம் மற்றும் நீதி நிறுவனங்கள் அதிகளவில் ‘பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு’ எனும் அணுகுமுறையைப் பின்பற்றுகின்றன. இது ஒரு குற்றத்தின் நிதி அம்சங்களில் கவனம் செலுத்துவதை உள்ளடக்குகின்றது.

நிதி விசாரணை என்பது நபர் ஒருவர், மக்கள் அல்லது வணிகத்தின் நிதி குறித்த எந்தவொரு விசாரணையும் ஆகும். குற்றவாளிகளைக் கண்டறிந்து வழக்குத் தொடுப்பது மற்றும் குற்றத்தின் வருமானத்தை மீட்டெடுப்பது என்ற இறுதி குறிக்கோளுடன், சந்தேகத்திற்கிடமான குற்றச் செயல்களின் போது பணத்தின் இயக்கத்தை அடையாளம் கண்டு பதிவுசெய்வதே நிதி விசாரணையின் முக்கிய நோக்கமாகும். பணத்தின் ஆதாரங்கள், பயனாளிகள், பணம் பெறப்படும்போது, அது எங்கே சேமிக்கப்படுகின்றது அல்லது வைப்பிலிடப்படுகின்றது என்பதற்கான தொடர்பு, மதிப்புமிக்க தகவல்களையும் குற்றச் செயல்களின் சான்றுகளையும் வழங்க முடியும்.

‘பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு’ அணுகுமுறை இரண்டு முக்கிய கூறுகளைப் பயன்படுத்துகின்றது: பணத்தூய்தாக்கல் தடுப்பு உத்திகள் மற்றும் சொத்து மீட்பு கருவிகள். சட்டவிரோதமாகச் சம்பாதித்த பணத்தின் அடையாளம், ஆதாரம், உரிமை அல்லது சேர்விடம் என்பனவற்றை மறைப்பதில் குற்றத்தினால் பெறப்பட்ட வருமானத்தை கையாள்தல் போன்ற பணத்தூய்தாக்கல் நடவடிக்கையானது ஒரு குற்றவியல் குற்றமாகும். சொத்து மீட்பு என்பது அனைத்து குற்ற வகைகளின் வருமானத்தையும் விசாரிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், பறிமுதல் செய்வதற்குமான ஒரு செயன்முறையாகும்.

1.2 பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு அணுகுமுறை ஏன் தேவைப்படுகின்றது?

ஏனைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைப் போலவே, மனிதக் கடத்தல் குழுமங்கள் கடத்தலினால் பெறப்பட்ட அவர்களின் இலாபத்தின் சட்டவிரோத மூலத்தை மறைக்கவும் அவர்களின் வணிகத்தின் வெற்றிகரமான செயல்பாட்டை செயற்படுத்தவும் பலவிதமான பணத்தூய்தாக்கல் நுட்பங்கள் பயன்படுத்துகின்றது. இதன் விளைவாக, மனிதக் கடத்தல் வழக்குகளில் ‘பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு’ அணுகுமுறையை இணைப்பதன் மூலம் நன்மைகள் உள்ளன.

- • ஆட்கடத்தலுடன் தொடர்புடைய நிதி ஓட்டங்களைக் கண்டறிந்து ஒரு குற்றவியல் வலையமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணவும், வழக்குகளுக்கு உதவக்கூடிய ஆதாரங்களை சேகரிக்கவும் புலனாய்வாளர்களுக்கு உதவும்.
    - பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியத்தின் மீதே தங்கியிருக்கவேண்டிய நிலைமையினைக் குறைக்க இது உதவும்.
    - இந்த இலாபத்திலிருந்து பயன் பெறுபவர்களையும் குற்றத்திலிருந்து தாம் தூர விலகியிருப்பதாகக் காட்டிக்கொள்ளும் சட்டவிரோத வலையமைப்பின் முக்கிய நபர்களையும் பயனாளிகளையும் அடையாளம் காணவும் இது உதவுகின்றது.
- பணத்தூய்தாக்கல் குற்றங்கள் ஆட்கடத்தலில் ஈடுபடும் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடர மற்றொரு வழியை வழங்கும். மனிதக் கடத்தல் குற்றங்களைப் பயன்படுத்தி வெற்றிகரமாக வழக்குத் தொடர போதுமான ஆதாரங்கள் இல்லாத இடத்தில் இது பயனுள்ளதாக இருக்கும். இதனால் நிதி விதிமுறைகளின் ஏனைய மீறல்களையும் கண்டறிய முடியும்.
- குற்றங்களின் மூலம் பெறப்பட்ட நன்மைகளை பறிமுதல் செய்வதன் ஊடாக அது குற்றத்தைத் தடுக்கும் விளைவை ஏற்படுத்தும் என்பதால் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டவுடன் அவர்களின் குற்றச் செயல்களிலிருந்து கிடைக்கும் இலாபம் அவர்களுக்குக் கிடைக்கும் என்று நம்பி சிறையில் சிறைவாசம் அனுபவிக்கத் தயாராக இருக்கும் குற்றவாளிகளை அது ஊக்கமிழக்கச்செய்யும்.
- மனிதக் கடத்தலுடன் தொடர்புடைய வருமானத்தை திறம்பட பறிமுதல் செய்வதனால் இலாபங்களை குற்றச் செயல்களில் மீண்டும் முதலீடு செய்வதிலிருந்து தடுக்கலாம் என்பதுடன் வருமானத்தை கடத்தல் எதிர்ப்பு முயற்சிகளை மேம்படுத்துவதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவை வழங்குவதற்கும் பயன்படுத்தலாம்.
- தண்டனை அல்லாத அடிப்படையிலான சொத்து பறிமுதல் கட்டமைப்பை[4] செயற்படுத்துவதால், மனித கடத்தல் உட்பட பரந்த அளவிலான குற்ற வகைகளில் கணிசமாக மேம்பட்ட முடிவுகள் கிடைக்கும். இந்த நடவடிக்கைகள் தொடர்பில் ஒரு குற்றவியல் தண்டனை தேவையில்லை என்பதன் மூலம் இலாபம் ஈட்டுபவர்களை குறிவைத்து குற்றச் செயலிலிருந்து அவர்களைத் தூர விலக்கிக் கொள்ள அதிக வாய்ப்பை வழங்குகின்றன.

4 குற்றத்தின் வருமானத்தை மீட்டெடுக்க இரண்டு வழிகள் உள்ளன: தண்டனை அடிப்படையிலான மீட்பு, அந்தக் குற்றத்திற்கான தண்டனை உறுதிசெய்யப்பட்ட பின்னர் ஒரு குற்றத்துடன் இணைந்த சொத்துக்களை மீட்டெடுக்க உதவுகிறது; மற்றும் தண்டனை அல்லாத (அல்லது சிவில்) அடிப்படையிலான மீட்பு. இது ஒரு குற்றவியல் தண்டனையைப் பெறுவதற்கான அவசியமின்றி குற்றவியல் தோற்றம் இருப்பதாக சந்தேகிக்கப்படும் சொத்துக்களை சொத்துக்களை கட்டுப்படுத்தவும் மீட்டெடுக்கவும் அனுமதிக்கிறது.

1.3 மனிதக் கடத்தல் எவ்வளவு பண மதிப்புள்ளது?

மனிதக் கடத்தல் என்பது உலக அளவில் நடத்தப்படும் ஒரு இலாபகரமான வணிகமாகும். 2014 ஆம் ஆண்டில், சர்வதேச தொழிலாளர் அலுவலகம் (ஐ.எல்.ஓ) உலகெங்கிலும் உள்ள மனித கடத்தல் மற்றும் அடிமைத்தனத்தின் மூலம் பெறப்பட்ட மொத்த சட்டவிரோத இலாபம் ஆண்டுக்கு 150.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பிட்டுள்ளது.[5] கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு இலாபங்கள் - 99 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கட்டாய பாலியல் சுரண்டலிலிருந்து வந்தவையாகும்.[6] உள்நாட்டு அல்லாத தொழிலாளர்களின் சுரண்டல் 43.4 பில்லியன் அமெரிக்க டொலர் இலாபத்தை ஈட்டியதுடன் கிட்டத்தட்ட 8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சுரண்டப்பட்ட வீட்டுத் தொழிலாளர்களிடமிருந்து வந்தது. பெரும்பாலான பாதிக்கப்பட்டவர்கள் இருக்கும் ஆசியாவில் இலாபம் மிக அதிகமாக இருந்தது. பாதிக்கப்பட்டவர் ஒருவருக்கான ஆண்டு இலாபம் வளர்ந்த பொருளாதார நாடுகளில் மிக அதிகமாக இருந்தது (பாதிக்கப்பட்டவருக்குச் சுமார் 34,800 அமெரிக்க டொலர்).

1.4 ஒரு புதிய சிந்தனை வழி-வாய்ப்புகளும் சவால்களும்

மனிதக் கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகள் பாரம்பரியமாக மனிதக் கடத்தலைத் தொடர்வதில் கவனம் செலுத்துகின்றன. ஆனால் குற்றத்திலிருந்து பெறப்பட்ட மற்றும் முதலீடு செய்யப்பட்ட வருமானத்தில் கவனம் செலுத்தவில்லை.[7] குற்றவாளிகளின் நடத்தையின் நிதி அம்சங்களில் எங்கள் கவனத்தை பலப்படுத்துவது பலவிதமான வாய்ப்புகளை வழங்குவதுடன் பல சவால்களையும் வழங்குகின்றது. ஒரு மனிதக் கடத்தல் வழக்கில் வெற்றிபெறுவது பற்றிய நமது புரிதலை விரிவுபடுத்துவதும், சொத்து பறிமுதல் செய்வதற்கான பங்களிப்பை அங்கீகரிப்பதும், இந்தக் குற்ற வகையை எதிர்த்துப் போராடுவதற்கு மாற்று வழக்குத் திட்டமாக பணத்தூய்தாக்கலைப் பயன்படுத்துவதும் ஒரு முக்கிய பிரச்சினையாக அமையும்.

உதவிக்குறிப்பு

மீட்கப்பட்ட சொத்துகள் பற்றிய புள்ளிவிவரங்களை சேகரித்தல் மற்றும் நபர்களின் வலையமைப்புகளில் கடத்தலை சீர்குலைக்க பணத்தூய்தாக்கல் குற்றங்களைப் பயன்படுத்துதல். மனிதக் கடத்தல் வழக்குகளில் உங்கள் அரசின் பதிலுக்கான செயல்திறன் குறிகாட்டிகளாக இவற்றை கருத்திற் கொள்ளவும்.

உதவிக்குறிப்பு

உங்கள் நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் ஊக்குவிப்பதற்காக மனிதக் கடத்தல் விசாரணையில் ‘பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு’ அணுகுமுறையைப் பின்பற்றுவதற்கான உயர் மட்ட ஆதரவைத் தெளிவாக வழங்குதல். உதாரணமாக, சிரேட்ட அதிகாரிகள் இந்த அணுகுமுறைக்கு ஆதரவான பொது அறிக்கைகளை வெளியிடலாம்.

மற்றொரு பிரச்சினை என்னவென்றால், கடத்தல் எதிர்ப்பு மற்றும் பணத்தூய்தாக்கல் எதிர்ப்பு சமூகங்கள் பெரும்பாலும் தனிமையில் செயற்படுவதாகும். மனிதக் கடத்தல் தொடர்பான நிதி நடவடிக்கைகளை கையாள சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கு பெரும்பாலும் தெரியாது அல்லது பயிற்சியளிக்கப்படுவதில்லை. மேலும் நிதி ஆய்வாளர்களுக்கு மனித கடத்தல் வணிக மாதிரிகள், சந்தைகள் மற்றும் சட்டவிரோத நிதிகளை நகர்த்துவதற்கான விருப்பத்தேர்வுகள் ஆகியவற்றில் கடத்தல் பற்றிய விரிவான அறிவு இல்லாமல் இருக்கலாம். இந்த முன்னோக்குகளை ஒன்றாகக் கொண்டுவருவது, மனித கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான எங்கள் முயற்சிகளை முன்னேற்றுவதற்கான மகத்தான ஆற்றலைப் பெறுகின்றது. ஆனால் நிறுவனக் குழப்பங்களை உடைக்க அரசுகளிடமிருந்து வலுவான அர்ப்பணிப்பு தேவைப்படும். இந்த அணுகுமுறையைப் பயன்படுத்த அரசுகளுக்கும் அவற்றின் முகவர் நிறுவனங்களுக்கும் உதவ விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் அவசியம்.

உதவிக்குறிப்பு

மனிதக் கடத்தல் குற்றங்கள் முழுமையாக விசாரணை செய்வதை உறுதி செய்வதற்காக அனைத்து தொடர்புடைய முகவராண்மைகளின் (காவல்துறை, அரசுத்தரப்பு வழக்குரைஞர்கள் மற்றும் நி.உ. பிரிவுகள் உட்பட) நிபுணத்துவத்தை ஒன்றிணைக்கும் செயல்பாட்டு உத்திகளை உருவாக்குங்கள்.

5 அரசால் விதிக்கப்பட்ட வலுக்கட்டாய உழைப்பு பற்றிய விபரங்கள் சேர்க்கப்படவில்லை

6 *இலாபங்களும் வறுமையும்: வலுக்கட்டாய உழைப்பின் பொருளாதாரம், ப. 12–13*

7 மனிதக் கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கு பணத்தூய்தாக்கல் தடுப்பு விதிமுறைகளை மேம்படுத்துதல் (2014), ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அலுவலகம் (OSCE) https://www.osce.org/secretariat/121125?download=true

மனிதக் கடத்தலிற்கு எதிராகப் பணத்தூய்தாக்கல் தடுப்பு நுட்பங்களைப் பயன்படுத்துவதை மேம்படுத்துவது நிதி வழக்கு தொடர்பான தகவல்களை விரைவாக பரிமாறிக்கொள்ள உதவுவதோடு நாடுகளுக்கிடையில் நெருக்கமான ஒத்துழைப்பு தேவைப்படும். மனிதக் கடத்தல் விசாரணையானது நி. உ. பிரிவுகளுக்கு இடையிலான தகவல் பரிமாற்றம் போன்ற பணத்தூய்தாக்கல் பிரச்சினைகளில் சர்வதேச ஒத்துழைப்புக்காக வலைமைப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் பயனடையக்கூடும். மனிதக் கடத்தலுடன் தொடர்புடைய இலாபங்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகர்த்துவதில் முக்கிய பங்குதாரரான தனியார் துறையுடன் இணைந்து அரசுகள் செயற்பட வேண்டும்.

1.5 வழக்கு ஆய்வு

2015 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி தாய்-மலேசிய எல்லைக்கு அருகிலுள்ள சாங்க்க்லா மாகாணத்தின் சதாவோ மாவட்டத்தில் கைவிடப்பட்ட முகாமில் குறைந்தது 30 சடலங்களை ஒரு கூட்டு இராணுவ-காவல்துறைப் பணிக்குழு கண்டுபிடித்தது. சந்தேகத்திற்குரிய மனிதக் கடத்தல் மற்றும் ஆட்கடத்தல் வலையமைப்பு தொடர்பான பொலிஸ் விசாரணையை ஆதரிப்பதற்காக, ரோயல் தாய் காவல்துறை தாய்லாந்தின் நிதி உளவுத்துறைப் பிரிவான தாய் பணத்தூய்தாக்கல் தடுப்பு அலுவலகத்தை (ஏஎம்எல்ஓ) தொடர்பு கொண்டு இந்த வழக்கு தொடர்பான நிதி நடவடிக்கைகள் குறித்து விசாரித்தது.

ஏஎம்எல்ஓ வின் நிதி பரிவர்த்தனை பதிவுகளின் தரவுத்தளத்தைப் பயன்படுத்தி, ஏஎம்எல்ஓ வின் அதிகாரிகள், இலத்திரணயியல் பணப் பரிமாற்ற பதிவுகள் (உள்நாட்டு மற்றும் சர்வதேச), எல்லை நாணய அறிக்கைகள், சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனை அறிக்கைகள், பண பரிவர்த்தனை அறிக்கைகள் மற்றும் சொத்து பரிவர்த்தனை அறிக்கைகள் ஆகியவற்றைத் தேடினர்.

அவற்றின் தரவுத்தளத்தைத் தேடுவதோடு அதற்கு மேலதிகமாக, ஏஎம்எல்ஓ விற்கு அறிக்கையிடும் ஏனைய நிறுவனங்களிலிருந்து ஏஎம்எல்ஓ பின்வருவன உள்ளிட்ட பல தகவல்களைக் கோரியது.

- (கணக்கு அறிக்கைகள் உட்பட), வெவ்வேறு நிதி நிறுவனங்களிலில் கணக்கு வைத்திருப்பவர் விபரங்கள் மற்றும் வாடிக்கையாளர் பரிவர்த்தனை விபரங்கள்
- தாய்லாந்து நில அலுவலகத்திலிருந்து சந்தேக நபர்கள் தொடர்பான நில உரிமையாளர், கையகப்படுத்தல் மற்றும் விற்பனை தொடர்பான பதிவுகள்
- தாய் வரி வருமான வரி அலுவலகத்திலிருந்து இந்த வழக்கில் முக்கிய சந்தேக நபர்களின் வரி செலுத்துவோர் நிலை தொடர்பான பதிவுகள், அவர்கள் பிரகடனப்படுத்திய வருமானம் பற்றிய விபரங்கள், தனிப்பட்ட மற்றும் வணிக வரி செலுத்தும் பதிவுகள் மற்றும் பிரகடனப்படுத்திய வங்கி ஏற்பாடுகள், மற்றும்
- வணிக மேம்பாட்டுத் துறையிலிருந்து முகவரிகள், பங்குதாரர்கள் மற்றும் நிதி சுயவிபரங்கள் உள்ளிட்ட அடையாளம் காணப்பட்ட வணிகங்களுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களின் விவரங்கள்.

வங்கி அறிக்கைகள் மற்றும் இலத்திரணியல் பணப் பரிமாற்ற விபரங்களைப் பயன்படுத்தி இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்தான மேலதிக முக்கிய சந்தேக நபர்களுக்கு நிதி பரிவர்த்தனைகளை ஏஎம்எல்ஓ கண்டுபிடிக்க முடிந்தது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து புதிய சந்தேக நபர்களுக்கு தாய்லாந்திற்குள் நேரடி கணக்கு பரிமாற்றம் மூலம் பணம் மாற்றப்படுவதை இவை காண்பித்தன. தாய்லாந்திற்கும் மலேசியாவிற்கும் இடையில் பணத்தை மாற்றுவதற்கு பண கூரியர்கள் மற்றும் சட்டவிரோதமாக பணம் செலுத்துபவர்கள் உள்ளிட்ட ஏனைய கொடுப்பனவு முறைகள் பயன்படுத்தப்பட்டன என்பதை ஏஎம்எல்ஓ பின்னர் நிரூபிக்க முடிந்தது. ரோயல் தாய் காவல்துறையினரிடமிருந்து நிதித் தகவல்களையும் மனித உளவுத்துறையையும் சேகரித்து விரிவான நிதி பரிமாற்ற பகுப்பாய்வை மேற்கொள்வதன் மூலம் ஏஎம்எல்ஓ இந்த பரிவர்த்தனைகளை ஒன்றாக இணைக்க முடிந்தது.

நிதி விசாரணை மற்றும் உளவுத்துறையைப் பயன்படுத்தி அடையாளம் காணப்பட்ட முக்கிய சந்தேக நபர்களில் சிரேட்ட அதிகாரிகள், குற்றவியல் வலையமைப்பின் சந்தேகத்திற்குரிய அமைப்பாளர், ஒரு மாகாண நிர்வாக அமைப்பின் முன்னாள் தலைவர், மேயர் மற்றும் ஒரு குறிப்பிடத்தக்க தொழிலதிபர் ஆகியோர் அடங்குவர். மனிதக் கடத்தல் மற்றும் பணத்தூய்தாக்கல் குற்றங்களுக்காக சந்தேக நபர்கள் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இந்தக் குற்றங்களுடன் தொடர்புடைய சட்டவிரோத இலாபங்களை பறிமுதல் செய்ய ஏஎம்எல்ஓ நீதிமன்ற உத்தரவுகளையும் கோரியது.

இந்த வழக்கு நிதி விசாரணை முறைகளினால் எவ்வாறு குற்றவாளிகள் மற்றும் ஆதாரங்களின் பரந்த வலையமைப்பையும் அவற்றுக்கிடையேயான தொடர்புகளையும் வெளிப்படுத்த முடிந்தது என்பதைக் காட்டுகின்றது. அவ்வாறின்றேல் அத்தகவல்கள் புலனாய்வாளர்களுக்கு கிடைக்காமல் இருக்கலாம்.

பிரிவு 2: சட்ட கட்டமைப்புகள்

2.1 சர்வதேச தரநிலைகள்

நிதி நடவடிக்கைப் பணிக்குழு (எப்ஏரீஎப்) என்பது பணத்தூய்தாக்கல் நடவடிக்கைகளில் சர்வதேச தரங்களை நிர்ணயிப்பதற்கும், அவற்றை செயற்படுத்துவதில் நாடுகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை மதிப்பிடுவதற்குமான 37 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அரச அமைப்பு ஆகும்.[8] பணத்தூய்தாக்கல் மற்றும் குற்றத்தின் வருமானம் தொடர்பாக நாடுகளுக்கான கடமைகள் அடங்கிய ஐ.நா. மாநாடுகளின் ஒப்பந்தங்கள் உள்ளன.[9] இந்தத் தரங்களில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள நாடுகளுக்கான முக்கிய கடமைகளில் விரிவான பணத்தூய்தாக்கல் குற்றங்கள் தொடர்பிலான சட்டங்களை ஆக்க வேண்டியதன் அவசியமும், குற்றத்தின் வருமானத்தை முடக்குவதற்கும், பறிமுதல் செய்வதற்கும், அரசுடமையாக்குவதற்குமானதோர் ஒரு பயனுள்ள ஆட்சியை நிறுவுதல் ஆகியவை அடங்கும்.

2.2 பாரிய பணத்தூய்தாக்கல் குற்றங்கள்

சர்வதேச தரங்களுக்கு இணங்க, விரிவான பணத்தூய்தாக்கல் சட்டமானது:

- பணத்தூய்தாக்கல் செயன்முறையின் அனைத்து நிலைகளையும் குற்றவியலுக்குட்படுத்துவதற்கும்
- மனிதக் கடத்தல் உட்பட சாத்தியமான முன்கணிப்பு குற்றங்களுக்கு பொருந்தும் வகையிலும்[10]
- சொத்தானது குற்றத்தின் வருமானம் என்பதை நிரூபிக்கும்போது, முன்னறிவிக்கப்பட்ட குற்றத்தை உறுதிப்படுத்துவது அவசியமில்லை என்பதை உறுதிப்படுத்தவும்
- சட்டபூர்வமான நபர்களுக்கு குற்றவியல் பொறுப்பை பிரயோகிப்பதற்கும் (உதாரணமாக, நிறுவனங்கள்)
- குற்றத்தின் வருமானத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புறும் எந்தவொரு சொத்துக்கும், அதன் மதிப்பைப் பொருட்படுத்தாமல் சட்ட பிரயோக்கிப்பிற்குட்படுத்துவதற்கும்,
- வேறொரு நாட்டில் நடந்த நடத்தை வரை நீட்டிக்கவும், அந்த நடத்தை வெளிநாட்டில் ஒரு குற்றமாக இருந்தால், அது சொந்த நாட்டில் ஒரு முன்னறிவிக்கப்பட்ட குற்றமாக இருக்கும், அத்துடன்
- பணத்தூய்தாக்கல் குற்றத்தை நிரூபிக்க தேவையான நோக்கமும் அறிவும் புறநிலை உண்மைகளிலிருந்து புரிந்து கொள்ளப்படலாம் என்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

உதவிக்குறிப்பு

பணத்தூய்தாக்கல் தொடர்பில் நிரூபிக்க, நிறுவ வேண்டிய முக்கிய கூறுகள் என்னவென்றால், பணத்தைக் கையாண்ட நபர் ஒருவர் அப்பணம் குற்றத்திலிருந்து பெறப்பட்டது அல்லது ஒரு குற்றம் தொடர்பில் பயன்படுதத் திட்டமிடப்பட்டிருக்கின்றது என்பதை அறிந்திருக்க அல்லது சந்தேகித்திருக்க வேண்டும்.

8 எப்ஏரீஎப் பரிந்துரைகள் 2012 மற்றும் 2013 ஐப் பார்க்கவும் எப்ஏரீஎப் பரிந்துரைகளுடன் தொழில்நுட்ப இணக்கம் மற்றும் ஏஎம்எல்/சீஎப்ரீ அமைப்புகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான எப்ஏரீஎப் முறை.

9 இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: *போதைப்பொருள் மற்றும் மனோவியல் பொருட்களில் சட்டவிரோத போக்குவரத்திற்கு எதிரான ஐ.நா.ஒப்பந்தம் 1988* (வியன்னா ஒப்பந்ம்), *நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐ.நா. ஒப்பந்தம் 2000* (யு.என்.டி.ஓ.சி அல்லது பலேர்மோ ஒப்பந்தம்) *மற்றும் ஐ.நா. ஊழலுக்கு எதிரான ஒப்பந்தம் 2003* (யு.என்.சி.ஏ.சி).

10 முன்கணிப்புக் குற்றம் என்பது மற்றொரு குற்றச் செயலுக்கான அடிப்படை ஆதாரங்களை வழங்கும் ஒரு செயலாகும். உதாரணமாக, மனிதக் கடத்தல் மற்றும் ஆட்கடத்தல் வியாபாரம் ஆகியவற்றில் கடத்தல் என்பது பணத்தூய்தாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்கான நிதிகளை வழங்கும் குற்றங்களை முன்னறிவிப்பதாக இருக்கலாம்.

உதவிக்குறிப்பு

பணத்தூய்தாக்கல் மற்றும் முன்னறிவிக்கப்பட்ட குற்றங்களுக்கு தனித்தனியாக வழக்குத் தொடர முடியும் என்பதை உறுதிப்படுத்தவும். ஒரு முன்னறிவிக்கப்பட்ட குற்றத்திற்காக (எ.கா. மனித கடத்தல்) ஒரு தண்டனையைப் பெற முடியாத சந்தர்ப்பங்களில், ஆனால் பணத்தூய்தாக்கல் பற்றிய ஆதாரங்கள் இருந்தால், இது சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு பணத்தூய்தாக்கல் குற்றத்தை தனித்தனியாக குற்றத்திற்கான இலக்காகக் கொள்ள உதவும்.

2.3 பயனுள்ள சொத்து பறிமுதல் கட்டமைப்புகள்

சொத்து பறிமுதல் அல்லது சொத்து மீட்பு என்பது குற்றத்தின் வருமானத்தை விசாரித்தல், தற்காலிக கட்டுப்பாடு, பறிமுதல் செய்தல் மற்றும் நிர்வகித்தல் என்பனவாகும். பறிமுதல் என்பது தண்டனை அடிப்படையிலானதாக இருக்கலாம் (பறிமுதல் செய்வதற்கு முன்னர் குற்றவியல் நடவடிக்கைகளில் ஒரு குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்தல்) அல்லது தண்டனை அடிப்படையில்லாததாக இருக்கலாம். ஒரு விரிவான சொத்து பறிமுதலானது குற்றத்தின் வருவாயை விசாரிக்கவும், பாதுகாக்கவும், கைப்பற்றவும் மற்றும் கட்டுப்படுத்தவும் உதவும். சொத்துக்களில் மூன்றாம் தரப்பிற்குள்ள (அல்லது அப்பாவித்தனமாக வைத்திருத்தல்) உரிமை போன்ற நலன்களைக் கருத்தில் கொள்வதற்கான நடவடிக்கைகளை மற்றும் சொத்துக்களை அரசாங்கம் பறிமுதல் செய்ய அனுமதிக்கும் நடவடிக்கைகள் ஆகியவை இதில் அடங்கும். தண்டனை அடிப்படையில்லாத சட்ட கட்டமைப்பை நடைமுறைப்படுத்திய பல நாடுகள் குற்றங்களை தடுக்கும் முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளதுடன் உதாரணமாக, குற்றத் தடுப்பு, கல்வி மற்றும் அமுலாக்கத் திட்டங்கள் மூலம் எதிர்கால குற்றங்களைத் தடுப்பதற்காக பறிமுதல் செய்யப்பட்ட பணத்தைப் பயன்படுத்த முடிந்துள்ளது.

உதவிக்குறிப்பு: தண்டனை அல்லாத அடிப்படையிலான பறிமுதல் முறைமைத் தாபிப்பு

தண்டனை அல்லாத அடிப்படையிலான பறிமுதல் ஊடாக குற்ற வருமானத்தின் செயல்திறனை மேம்படுத்த முடியும். குற்றவியல் தண்டனையை வழங்கும் அவசியமின்றி குற்றச் செயலில் இருந்து பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சொத்துக்களை கட்டுப்படுத்தவும் மீட்டெடுக்கவும் தண்டனை அல்லாத அடிப்படையிலான மீட்பு அனுமதிக்கின்றது. அதனால் பின்வருவனவற்றை செய்ய முடியும்:

- விசாரணைச் செயற்பாட்டின் ஆரம்பக் கட்டத்தில் சொத்துக்கள் முடக்கப்படவோ அல்லது கட்டுப்படுத்தவோ அனுமதிக்கப்படுவதன் ஊடாக இது ஒரு விசாரணை அல்லது வழக்கு தொடரும்போது சொத்துக்கள் அகற்றப்படுவதைத் தடுக்க உதவுகின்றது
- ஒரு குற்றவாளி இறந்துவிடக்கூடிய, கண்டுபிடிக்க முடியாத, அல்லது அடையாளம் காண முடியாத நிலைகளில் இது ஒரு வெற்றிகரமான முடிவை வழங்குதல்
- தங்களைத் தூர விலக்கிக் கொண்டு குற்றவியல் தண்டனை தேவையில்லை எனக் கருதும் குற்றச் செயலின் ஊடாக பெறப்படும் வருமானத்தில் இருந்து வருமானம் பெறும் நபர்களிடமிருந்தும் பறிமுதல் செய்வதை இயலச்செய்யும், மற்றும்
- ஒரு மூன்றாம் தரப்பினரால் தக்கவைக்கப்பட்டிருக்கும் அல்லது குற்றவாளியின் திறமையான கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் கறைபடிந்த சொத்தை (குற்றவியல் குற்றத்தைச் செய்த ஒரு நபரால் அல்லது குற்றவியல் குற்றத்துடன் தொடர்புடைய ஒரு நபரால், பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்த விரும்பும் சொத்து) பறிமுதல் செய்தலை இயலச்செய்யும்.

2.4 என்ன சொத்துக்களைத் தடுத்துவைக்கவும் மீட்டெடுக்கவும் முடியும்?

ஒரு குற்றத்தைச் செய்யப் பயன்படுத்தப்படும் சொத்துகள் (கருவிகள்) மற்றும் ஒரு குற்றத்திலிருந்து பெறப்பட்டவை (குற்றத்தின் வருமானம்) அல்லது அவற்றின் மதிப்பு ஆகியவை கட்டுப்படுத்தப்பட்டு மீட்கப்படலாம். குற்றவாளி மற்றொரு நபரின் பெயரில் வைத்திருக்கும் சொத்தை கட்டுப்படுத்தவும் முடியும். ஆனால் அச்சொத்துக்கள் மீது குற்றவாளியின் முழுமையான கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். பல குற்றவாளிகளுக்கு, அவர்களின் குற்றத்தின் இலாபங்களைப் பாதுகாப்பது ஒரு முக்கிய குறிக்கோள் மற்றும் குற்றவாளிகள் தங்கள் சொத்தின் மூலத்தையும் உரிமையையும் மறைக்க எடுக்கும் நடவடிக்கைகள் புலனாய்வாளர்களுக்கு ஒரு சிக்கலான சவாலாக மாறிவிட்டன. உள்நாட்டுச் சட்டமானது வெளிநாட்டு வசம் உள்ள சொத்தின் சவாலை எதிர்கொள்ளும் அளவுக்கு நெகிழ்வானதாக இருக்க வேண்டும் மற்றும் நன்மை பயக்கும் உரிமையாளர் உண்மையில் யார் என்பதை நிறுவுவதற்காக சிக்கலான உரிமையாளர் கட்டமைப்புகளைத் அதன் ஊடாகத் தடுக்க முடியும்.

சொத்து அல்லது மாற்றப்பட்ட சொத்து அல்லது முழுமையாக உருமாற்றப்பட்ட சொத்து அல்லது வேறு சொத்தாக மாற்றப்பட்ட சொத்தின் பொருளாதார ஆதாயங்களை **குற்றத்தின் வருமானமானது** உள்ளடக்கும். உதாரணமாக, மனித கடத்தலின் வருமானத்திலிருந்து பெறப்பட்ட நிதியைக் பயன்படுத்தி வாங்கப்பட்ட ஒரு மோட்டார் வாகனம், வீடு அல்லது படகு பறிமுதல் செய்யப்படலாம், ஏனெனில் அது குற்றத்தின் வருமானத்தைப் பயன்படுத்தி வாங்கப்பட்டது.

குற்றத்தின் **ஒரு கருவி** (அல்லது கருவி) என்பதில் ஒரு குற்றத்திற்குத் துணைபோகும் வகையில் பயன்படுத்தப்படும் சொத்து மற்றும் உதாரணமாக, மக்களைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு கார் அல்லது படகு அல்லது குற்றச் செயல்களுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்படும் பணம் ஆகியவை அடங்கும். வாகனம் குற்றத்தின் வருமானம் அல்லது முன்னைய குற்றவியல் குற்றங்களிலிருந்து பெறப்பட்ட நிதியைக் கொண்டு வாங்கப்பட்டது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லாமல் இருக்கலாம். இருப்பினும், இது ஒரு குற்றத்தை செய்ய பயன்படுத்தப்பட்டால், அது குற்றத்தின் ஒரு கருவியாக பறிமுதல் செய்யப்படலாம்.

சொத்தின் **திறம்பட்ட கட்டுப்பாடு** என்பது ஒரு சொத்தைக் கட்டுப்படுத்தும் நபர் ஒருவருக்கு அச்சொத்தில் சட்டபூர்வமான அல்லது நியாயமான உரிமை உள்ளதா இல்லையா அல்லது சொத்து தொடர்பாக உரிமை அல்லது அதிகாரம் உள்ளதா என்பதாகும். நபர் ஒருவருக்குச் சொத்தின் திறமையான கட்டுப்பாடு உள்ளதா என்பதை தீர்மானிக்கும்போது பல காரணிகள் இருக்கின்றன அவை பின்வருமாறு:

- (நேரடியாக அல்லது மறைமுகமாக இருந்தாலும்) ஒரு நிறுவனத்தின் பங்குதாரர்கள், கடன் பத்திரங்கள் அல்லது பணிப்பாளர்களாக இருப்பின் அவர்களுக்கு சொத்தில் உரிமையுள்ளதாகக் கருதப்படும்
- சொத்துடனான உறவைக் கொண்ட ஓர் அறக்கட்டளை இருந்தால் அவர்களுக்குச் சொத்தில் உரிமையுள்ளதாகக் கருதப்படும்
- சொத்தில் உரிமையுள்ள நபர்களுக்கு இடையிலான குடும்பம், உள்நாட்டு மற்றும் வணிக உறவுகள் இருப்பின் அவர்களுக்குச் சொத்தில் உரிமையுள்ளதாகக் கருதப்படும்.

உதவிக்குறிப்பு: வெற்றிகரமான சொத்துப் பறிமுதல் நிறுவுதல்

குற்றவியல் சொத்துப் பறிமுதல் விளைவுகளை பின்வருவன மூலம் மேம்படுத்தலாம்:

- அனைத்துச் சட்ட அமுலாக்க முகவராண்மைகள், நிதி உளவுத்துறைப் பிரிவுகள் மற்றும் அரசு வழக்குரைஞர்களுக்கு விரிவான தகவல்களையும் பயிற்சியையும் வழங்குதல்.
- சொத்துப் பறிமுதல் செய்வதில் முன்னுரிமையுடன் சிறப்பு விசாரணை மற்றும் வழக்குக் குழுக்கள் அல்லது பிரிவுகளை உருவாக்குதல்.
- சொத்துப் பறிமுதல் செய்வதற்கான அனைத்து அம்சங்கள் தொடர்பிலும் திட்டமிடுவதற்காக புலனாய்வாளர்களுக்கும் அரசு வழக்குரைஞர்களுக்கும் இடையில் ஆரம்பக் கட்டத்தில் நெருக்கமான ஒத்துழைப்பை வளர்த்தல்.
- உங்கள் சொத்துப் பறிமுதல் சட்ட கட்டமைப்பின் அனைத்துக் கூறுகளையும் மதிப்பாய்வு செய்தல் மற்றும் பலப்படுத்துதல், பின்வருவன உள்ளடங்கலாக;
  - சொத்துக்களைக் கண்டுபிடித்து நன்மை பெறும் உரிமையை நிறுவுவதற்கான விசாரணை அதிகாரங்கள்
  - முடக்கம், கட்டுப்பாடு மற்றும் பறிமுதல் விதிகள், மற்றும்
  - பரஸ்பர சட்ட உதவி.

பிரிவு 3: மனிதக் கடத்தலுடன் தொடர்புடைய பணத்தூய்தாக்கல் முறைகள்

3.1 பணம் எவ்வாறு தூய்தாக்கப்படுகின்றது?

பணத்தூய்தாக்கல் செயன்முறை பல்வேறு படிகளை உள்ளடக்கியது எனினும் இது வழக்கமாக மூன்று படிமுறைகளாகப் பிரிக்கப்படுகின்றது: சட்டபூர்வ நிதி நிலையம் ஒன்றில் வைப்பிடுதல், பணத்தை அதன் சட்டவிரோதமான ஆரம்ப மூலத்திலிருந்து பிரித்தெடுத்தல் மற்றும் சட்டபூர்வமான நிதியுடன் ஒருங்கிணைப்பு செய்தல். அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி அமையும்.



- **சட்டபூர்வ நிதி நிலையம் ஒன்றில் வைப்பிடுதல்** என்பது சட்டவிரோத நிதி அல்லது சொத்துக்களை நிதி அமைப்பிற்குள் கொண்டுவருவதாகும். உதாரணமாக, வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பு செய்வதன் மூலமோ அல்லது சொத்துக்களை வாங்க பணத்தைப் பயன்படுத்துவதன் மூலமோ இதைச் செய்யலாம்.
- **பணத்தை அதன் சட்டவிரோதமான ஆரம்ப மூலத்திலிருந்து பிரித்தெடுத்தல்** என்பது வைக்கப்பட்ட நிதிகளின் சட்டவிரோத தோற்றத்தை நகர்த்துவதன் மூலம் அல்லது மறைப்பதன் மூலம் மறைப்பதை உள்ளடக்குகின்றது. உதாரணமாக, தொழில் வல்லுநர்கள் இடைத்தரகர்களாக (வழக்கறிஞர்கள் அல்லது கணக்காளர்கள் போன்றவர்கள்) செயற்படுவதன் மூலமோ அல்லது பணத்தை மாற்ற சிக்கலான நிறுவனம் மற்றும் நம்பிக்கை கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலமோ இதைச் செய்யலாம்.
- சட்டபூர்வ நிதி நிலையம் ஒன்றில் வைப்பிடப்பட்டு பணத்தை அதன் சட்டவிரோதமான ஆரம்ப மூலத்திலிருந்து பிரித்தெடுத்தெடுக்கப்பட்ட பின்னர் **சட்டபூர்வமான நிதியுடன் ஒருங்கிணைப்பு செய்தல் செயன்முறை** ஏற்படுகின்றது. மேலும் அவை குற்றவாளிகளுக்கு வெளிப்படையாக முறையான நிதிகளாகப் பயன்படுத்தவும் கட்டுப்படுத்தவும் கிடைக்கின்றன. மேலும் குற்றச் செயல்களில் முதலீடு செய்வதல் அல்லது சட்டபூர்வமான வணிகங்களை மேற்கொள்தல் (நிறுவனங்களில் பங்குகள் போன்றவை) அல்லது அதிக மதிப்புள்ள சொத்துக்களை கொள்வனவு செய்தல் (சொத்து போன்றவை) மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்குதல் (விலையுயர்ந்த கார்கள் போன்றவை) போன்ற செயல்களுக்கு வெளிப்படையாக 'சுத்தமான பணம்' கிடைக்கின்றது.

3.2 பொதுவான பணத்தூய்தாக்கல் முறைகள்

எந்தவொரு இடத்திலும் பணத்தூய்தாக்கல் முறைகள் (அல்லது 'சட்டவிரோத நிதிகளின் மோசடி நுட்பங்கள்') பொருளாதாரம், நிதிச் சந்தைகள் மற்றும் பணத்தூய்தாக்கல் எதிர்ப்பு அமைப்புக்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. கறுப்புப் பணத்தை பணத்தூய்தாக்கல் செய்வதற்கான வழிமுறைகளை உருவாக்குவதிலும் குற்றவாளிகள் மிகவும் ஆக்கப்பூர்வமாக இருக்க முடியும்.

பொதுவான பணத்தூய்தாக்கல் முறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வெளிநாட்டு வங்கிகள்
வங்கி இரகசியச் சட்டங்களைக் கொண்ட நாடுகளில் 'வெளிநாட்டு கணக்குகள்' மூலம் பணம் அனுப்பப்படலாம். இதனால் அநாமதேய வங்கி கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்படலாம்.

பணம் கடத்தல்
குற்றங்களில் இருந்து வரும் வருவாயை அவர்கள் உருவாக்கிய குற்றங்களிலிருந்து தூர விலக்குவதற்கு பணத்தை எல்லைகள் வழியாக பௌதீக ரீதியாக கொண்டு செல்ல முடியும்.

மாற்று/முறைசாரா பணம் அனுப்புதல்கள்
ஆசியாவில் சில நாடுகளில் நன்கு நிறுவப்பட்ட, சட்டரீதியான மாற்று வங்கி முறைகள் உள்ளன. அவை ஆவணமற்ற வைப்புத்தொகை, திரும்பப் பெறுதல் மற்றும் பணமாற்றங்களை அனுமதிக்கின்றன.

ஷெல் நிறுவனங்கள் (ஷெல் நிறுவனம் என்பது ஒரு வணிகமாகும், இது நிதிகளை வைத்திருக்கவும் மற்றொரு நிறுவனத்தின் நிதி பரிவர்த்தனைகளை நிர்வகிக்கவும் உருவாக்கப்பட்டது)
உண்மையில் இல்லாத பொருட்கள் அல்லது சேவைகளுக்கான 'கட்டணம்' என சட்டவிரோத இலாபங்களை பெறும் நோக்கில் போலி விலைப்பட்டியல் மற்றும் இருப்புநிலைகள் மூலம் முறையான பரிவர்த்தனைகளின் தோற்றத்தை உருவாக்குவதன் மூலம் பணத்தை தூய்தாக்கம் செய்வதற்கான ஒரே நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் இவை.

அறிக்கையிடல் தேவையைத் தவிர்ப்பதற்கான **ஸ்ட்ரக்சரிங் அல்லது 'ஸ்மர்ஃபிங்'** முறைமைகள்
நி.உ. பிரிவுகளின் எல்லைகளைப் தவிர்ப்பதற்காக பெரிய அளவிலான பணம் சிறிய, குறைவான சந்தேகத்திற்குரிய அளவுகளாக உடைக்கப்படுகின்றது. பின்னர் பணம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிக் கணக்குகளில் பல நபர்களால் (ஸ்மர்ப்ஸ்) அல்லது ஒரு தனி நபரால் நீண்ட காலத்திற்கு வைப்பு செய்யப்படுகின்றது.

முறையான நிறுவனங்களில் முதலீடு செய்தல்
சட்டவிரோத இலாபங்களை அதன் மூலத்தை மறைக்க சட்டபூர்வமான வணிகங்களில்-குறிப்பாக பண அடிப்படையிலான வணிகங்களில், உணவகங்கள் மற்றும் பார்கள் போன்றவற்றில் முதலீடு செய்யலாம். இந்த வணிகங்கள் உண்மையில் ஒரு பொருள் அல்லது சேவையை வழங்கும் 'ஃப்ரொன்ட் நிறுவனங்கள்' ஆக இருக்கலாம், ஆனால் அதன் உண்மையான நோக்கம் பணத்தூய்தாக்கம் செய்பவரின் பணத்தை சுத்தம் செய்வதாகும்.

அதிக மதிப்புடைய சொத்துக்கள்
கலை, பழம்பொருட்கள், நகைகள், விலைமதிப்புடைய உலோகங்கள் மற்றும் கற்கள், படகுகள் அல்லது வாகனங்கள் மற்றும் நிலம் வீடு போன்ற அதிக மதிப்புடைய பொருட்கள் மற்றும் சொத்துக்களை குற்றவியல் வருமானத்தை மறு முதலீடு செய்ய அல்லது மறைக்கும் ஒரு வழியாக வாங்கலாம்.

வர்த்தக அடிப்படையிலான பணத்தூய்தாக்கல்
குற்றவியல் வருமானத்தை மறைக்கச் சட்டப்படியான வர்த்தகம் பயன்படுத்தப்படலாம். இது பணத்தூய்தாக்கல் பற்றிய ஒரு அதிநவீன முறையாகும், மேலும் சட்டவிரோத பொருட்களை நகர்த்துவது, ஆவணங்களைப் பொய்யாக்குவது, நிதி பரிவர்த்தனைகளைத் தவறாகச் சித்தரிப்பது மற்றும் பொருட்களின் மதிப்பை குறைத்து-அல்லது அதிகரித்து விலைப்பட்டியல் தயாரித்தல் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

3.3 மனிதக் கடத்தல் சம்பவங்களில் பணத்தூய்தாக்கல்

நிதி தடவியல் அறிக்கை: ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் மனிதக் கடத்தலை எதிர்ப்பதற்கான நிதி விசாரணைகளின் பகுப்பாய்வு வழிகாட்டியினது இப்பிரிவினை அறிவிப்பதற்காக உருவாக்கப்பட்டது. மனிதக் கடத்தலுடன் தொடர்புடைய நிதி பாய்ச்சல்கள் மற்றும் மனிதக் கடத்தலை எதிர்த்து நிதி கருவிகளைப் பயன்படுத்துவதில் சமீபத்திய உலகளாவிய அனுபவங்கள் குறித்த முக்கிய உலகளாவிய ஆய்வுகளின் கண்ணோட்டத்தை இந்த அறிக்கை வழங்குகின்றது. பாலி செயன்முறை உறுப்பு நாடுகளின் வழக்கு ஆய்வுகள் உள்ளிட்ட வினாக்கொத்திற்கான பதில்களையும் இது பகுப்பாய்வு செய்கின்றது.

உலகளவில் மற்றும் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் மனிதக் கடத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிதி பாய்ச்சல்கள் குறித்துக் குறைவான தரவு மற்றும் புள்ளிவிபரங்கள் உள்ளன என்பதை அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. மனிதக் கடத்தலுடன் தொடர்புடைய நிதிப் பாய்ச்சல்கள் தொடர்பான விசாரணையில் இரண்டு சாத்தியமான வழிகள் உள்ளன: கடத்தல்காரர்களால் தூய்தாக்கம் செய்யப்பட்ட சட்டவிரோத நிதிகளின் ஓட்டம்; மற்றும் கடத்தப்பட்ட நபர்களிடமிருந்தான நிதி பாய்ச்சல், குறிப்பாக பண பரிமாற்ற சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம், ஏனைய நாடுகளில் உள்ள குடும்பங்களுக்கு பணம் அனுப்புதல் அல்லது கடத்தல்காரர்களுக்கு 'கடன்களை' செலுத்தும் நோக்கத்திற்காக வங்கி கணக்குகள் அல்லது பண பரிமாற்ற சேவைகளைப் பயன்படுத்துதல்.

கடத்தப்பட்ட நபர்களிடமிருந்து வரும் நிதி ஓட்டம் குறித்து குறிப்பாக குறைந்த தகவல்களே உள்ளன. குறிப்பிட்ட வகை கடத்தலைக் கருத்தில் கொள்ளும்போது (உதாரணமாக, பாலியல் சுரண்டல்) பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையைத் தெரிவிக்க இந்த தகவல் மிகவும் மதிப்புமிக்கதாக இருக்கும். மேலும் தற்போதைய ஆய்வுகள் மற்றும் அரசாங்க வெளியீடுகள் பணத்தூய்தாக்கல் முறைகளில் அதிக கவனம் செலுத்துகின்ற போதிலும் மனிதக் கடத்தல் மற்றும் புலம்பெயர் கடத்தல் ஆகியவற்றை ஒரே நோக்கின் கீழ் கருதுகின்றன. இது இந்தக் குற்றங்களின் முறைகள் மற்றும் குறிகாட்டிகளின் மிக விரிவான விளக்கங்களை விளைவிக்கின்றது. அந்த பதில்களுக்கு குற்றவியல் நீதி மறுமொழிகள் மற்றும் தனியார் துறை பங்களிப்புகளை வழிநடத்தக்கூடிய இடர் மதிப்பீடுகளை ஆதரிப்பதில் சிறந்த தரவு மற்றும் பகுப்பாய்வு மிக முக்கியமானது.

மனிதக் கடத்தலைக் கண்டறிவதற்கும், கடத்தல்காரர்கள் மீது வெற்றிகரமாக வழக்குத் தொடுப்பதற்கும், சட்டவிரோத நோக்கங்களுக்காக அதன் பயன்பாட்டிற்கு எதிராக நிதி அமைப்பை கடினப்படுத்துவதற்கும் அரசு மற்றும் தனியார் துறை கூட்டாண்மைகளின் சமீபத்திய சர்வதேச எடுத்துக்காட்டுகளையும் நிதி தடவியல் அறிக்கை காட்டியது. இந்தக் கூட்டாண்மைகள் மனித கடத்தலுக்கு எதிரான பாதுகாப்புக் வலயமாக தனியார் துறையை சிறப்பாக ஈடுபடுத்துவதற்கான குறிப்பிடத்தக்க திறனை நிரூபிப்பதுடன் விசாரணைகள் மற்றும் வழக்குகளை ஆதரிக்க பொருத்தமான அறிவு மற்றும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துகின்றன.

பாலி செயன்முறை உறுப்பு நாடுகளின் கேள்வித்தாள்களுக்கான பதில்கள் பிராந்தியத்தில் மனிதக் கடத்தலின் வருமானத்தைத் தூய்தாக்கம் செய்வதற்கான பின்வரும் முக்கிய முறைகளை அடையாளம் கண்டன:

- குறைந்த மதிப்புப் பரிவர்த்தனைகளின் பயன்பாடு (பெரும்பாலும் சட்டபூர்வ வரம்புகளுக்கு கீழே)
- பணம் அல்லது மதிப்பு பரிமாற்ற சேவை வழங்குநர்களின் பயன்பாடு
- வருமானத்தை முறையான வணிக வருமானத்துடன் இணைத்தல், மற்றும்
- வருமானத்தை மற்றவர்களுக்கு மாற்றுதல் போன்றன.

நபர் ஒருவரின் வாழ்க்கை முறை அவர்களின் நியாயமான வருமான ஆதாரத்துடன் பொருந்தாத ஒரு முக்கிய நிதிகாட்டி என்பதையும் கேள்வித்தாளின் பதில்கள் அடையாளம் காண்கின்றன. சட்ட அமுலாக்க முகமைகளின் விசாரணைகள், நிதி நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனை அறிக்கைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் புகார்கள் ஆகியவை மனிதக் கடத்தல் அல்லது மனிதக் கடத்தல் தொடர்பான பணத்தூய்தாக்கல் ஆகியன கண்டறியப்பட்ட பொதுவான முறைமைகள் ஆகும்.[11]

11 அதே மூலத்தின் பக்கம் 35

பிரிவு 4: நிதி சார்ந்த புலனாய்வு அலகுகள் (நி.உ.பி.)

4.1 பணத்தூய்தாக்கல் நடவடிக்கையை அரசாங்கம் எவ்வாறு இனங்காணுகின்றது?

பயனுள்ள 'பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு' அணுகுமுறையை எளிதாக்குவதில் நி.உ. பிரிவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நபர் ஒருவர் அல்லது ஒரு நிறுவனம் பணத்தைத் தூய்தாக்கம் செய்வதைக் கண்டுபிடிக்க, அரசாங்கத்திற்கு நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிதி சாரா நிறுவனங்கள் மற்றும் கேசினோக்கள், நிறுவன சேவை வழங்குநர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் கணக்காளர்கள் போன்ற தொழில் வல்லுநர்களிடமிருந்து தகவல் தேவைப்படுகின்றது. சந்தேகத்திற்குரியதாகத் தோன்றும் பணப் பரிவர்த்தனைகள் தொடர்பில் எந்த நிறுவனங்கள் புகாரளிக்க வேண்டும் எனும் கடப்பாட்டினை பணத்தூய்தாக்கல் தடுப்பு தரநிலைகள் விதித்துள்ளதுடன் அவை அறிக்கையிடல் நிறுவனங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அரசாங்கம், அதன் நி.உ. பிரிவுகளின் மூலம், சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனை அல்லது விடய அறிக்கைகள் எனப்படும் தகவல்களை புகாரளிக்கும் நிறுவனங்கள் மூலம் பெறுகின்றது. நி.உ. பிரிவானது இந்தத் தகவலைப் பகுப்பாய்வு செய்து, அதை மற்ற சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கு வழங்குகின்றது. கீழேயுள்ள வரைபடம் ஒரு நி.உ. பிரிவிற்கு உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் தகவல்களின் ஓட்டங்களைக் காட்டுகின்றது.



வரைபடம்: நிதி உளவுத்துறைப் பிரிவுகள்: ஒரு கண்ணோட்டம், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, *2004*[12]

12 https://www.imf.org/external/pubs/ft/FIU/fiu.pdf

4.2 நி.உ. பிரிவுகள் என்ன செய்கின்றன?

சூழலுக்கும் தேவைகளுக்கும் எது மிகவும் பொருத்தமானது என்பதைப் பொறுத்து, வெவ்வேறு அரசுகளில் வெவ்வேறு வகையான நி.உ. பிரிவுகள் காணப்படுகின்றன. சகல நி.உ. பிரிவுகளுக்கும் நிதி உளவுத்துறைத் தகவல்களை பெறும், பகுப்பாய்வு செய்யும் மற்றும் பரவச் செய்யும் பொறுப்புக்கள் இருக்கின்றன.

உலகளாவிய ரீதியிலுள்ள 152 நி.உ. பிரிவுகளின் அமைப்பில் ஒன்றான **நி.உ. பிரிவுகளின் எக்மாண்ட் குழுவில்** உறுப்பினராக சேருவதற்கு எப்ஏரீஎப் நி.உ. பிரிவுகள் ஊக்குவிக்கின்றது.

எக்மாண்ட் செக்யூர் வெப் (ESW) மூலம் தகவல் பகிர்வுக்காக வெளிநாட்டு இணைத் தரப்புகளுக்கு உதவுவது நி.உ. பிரிவுகளினது தொழிற்பாடுகளில் முக்கியமான ஒரு விடயமாகும்.[13] எனினும், நி.உ. பிரிவுகளுக்கு இடையிலான தகவல் பரிமாற்றம் விரைவான நிதி உளவு விடயத்திற்கான ஏற்பாடுகளை செய்ய முடியும் என்றாலும் நி.உ.பி. வழங்கும் ஒப்புதலின்றி குற்றவியல் நடவடிக்கைகளில் இதை ஆதாரமாகப் பயன்படுத்த முடியாது.

சில நி.உ. பிரிவுகள் ஒரு புலனாய்வுச் செயல்பாட்டைக் கொண்டிருப்பதும் மற்றையவற்றுக்கு அவ்வாறு இல்லாதிருப்பதும் ஒரு நி.உ.பி. ஒரு புலனாய்வுக்கு அல்லது வழக்கு விசாரணைக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதில் செல்வாக்குச்செலுத்தும் முக்கிய வேறுபாடாகும். கொடுக்கல்வாங்கல்களை முடக்குவதற்கும் சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கும் இருக்கின்ற அதிகாரங்கள் இதில் உள்ளடங்கலாம். பல நி.உ. பிரிவுகளும் கூட பணத்தூய்தாக்கல் முறைகள் பற்றிய தொழில்துறையினருக்கு அறிவுறுத்துவதில் பங்களித்து இணங்காதவர்களுக்கு அபராதங்களையும் தண்டப்பணங்களையும் விதிப்பதன் மூலம் ஒழுங்குவிதி ஏற்பாடுகளுக்கான இணக்கப்பாட்டு விடயங்களை நடைமுறைபடுத்துகின்றன.

உதவிக்குறிப்பு: உங்கள் நி.உ.பிரிவுடன் செயலில் ஈடுபடுவதை ஊக்குவித்தல்

- முகவராண்மைகளுக்கு இடையில் வழக்கமான தகவல்கள் பகிர்வை ஊக்குவித்தல்.
- ஒரு இரு வழி அறிவு அனுபவ பரிவர்த்தையை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு உங்களின் புலனாய்வு முகவராண்மையிலுள்ள அல்லது நிபுணத்துவ புலனாய்வு குழுக்களிலுள்ள உங்களது நி.உ. பிரிவிலிருந்து வெளியால் பதவிக்கமர்த்தப்பட்டுள்ள அதிகாரிகளை அல்லது நிரந்தரமாகவுள்ள அதிகாரிகளைக் கவனியுங்கள்.

4.3 உங்களின் புலனாய்வுக்கு உங்கள் நி.உ.பி. எவ்வாறு உதவ முடியும்?

ஆட்களைக் கடத்தல் தொடர்பான விசாரணைகளுக்கும் வழக்குகளுக்கும் உதவும் வகையில் நி.உ. பிரிவுகள் மதிப்புமிக்க தகவல்களையும் உதவிகளையும் வழங்க முடியும். நி.உ.பி. வழங்கக்கூடிய உதவி வகைகள் அடங்கிய ஒரு பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. உங்கள் நாட்டிலுள்ள நி.உ.பி. மாதிரியானது உங்களுக்கு வழங்கக்கூடிய உதவி வகையை பாதிக்கும். நி.உ. பிரிவுகள் பின்வருவனவற்றின் மூலமாக **புலனாய்வு** முயற்சிகளுக்கு உதவலாம்.

- பணத்தூய்தாக்கல் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் தனிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய **நிதி உளவுத்துறை அறிக்கைகளை** தயாரித்தல்.
- சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள், பண பரிவர்த்தனை அறிக்கைகள், பண எல்லை தாண்டிய அறிக்கைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்கள் தொடர்பான **நிதி சார்ந்த தகவல்களைப்** பெற்றுக்கொடுத்தல். இது **குற்றவியல் குற்றவாளிகளை நீங்கள் அடையாளம் காணவும்** அதே போல் **தற்போதைய புலனாய்வுகளுக்கு அல்லது புதிதாக வழக்குகளை தொடர்வதற்கும்** உதவலாம்.
  - **சந்தேகத்திற்கிடமான நிதி சார்ந்த கொடுக்கல்வாங்கல்களை முன்கூட்டியே இனங்காண்பது** நிகழும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்குக் கருவியாக இருக்கக்கூடும். உதாரணமாக, பயங்கரவாத செயல்கள் தொடர்பான வழக்குகளில், அல்லது மனித கடத்தல்காரருக்குப் பணம் செலுத்துதல் போன்ற தற்போதிருக்கின்ற குற்றச் செயல்களைக் குறிக்கக்கூடியதாக இருக்கலாம்.
- **கணக்குகளை முடக்குவதற்கும், சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கும்,** சில சந்தர்ப்பங்களில், **குறிப்பிட்டவொரு சில காலப்பகுதிற்கு கொடுக்கல்வாங்களை தடுப்பதற்கும் சில நியாயாதிக்கங்களில்** அதிகார ஆற்றல் இருக்கின்றது. இந்த ஒரு எண்ணக்கருவை உறுதிப்படுத்திக் கொள்ளும் நிமித்தம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள உங்களுக்கு நேரத்தை அனுமதிக்கும் வேளையில் நிதியைப் பாதுகாக்கவும் உதவலாம்.
- **ஒரு புலனாய்வுக்கு உதவும் வகையில் நிதி சார்ந்த நிபுணத்துவத்தை வழங்குதல்** – உ.ம்.: நிதி சார்ந்த சான்றுகளை புலனாய்வு செய்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும், சில சந்தர்ப்பங்களில் நீதிமன்ற சட்டநடவடிக்கைகளில் உதவுவதற்கும் உங்கள் நி.உ.பி. தடயவியல் கணக்கு சேவைகளை வழங்கலாம்.

13 நிதி உளவுத்துறை பிரிவு: ஒரு கண்ணோட்டம் சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி 2004. http://www.egmontgroup.org/about/financial-intelligence-units-fius தயவுசெய்து எக்மாண்ட் குழு உறுப்பு நாடுகளின் பட்டியலைப் பார்க்கவும். https://www.egmontgroup.org/en/membership/list

- அவற்றின் வெளிநாட்டு இணைத் தரப்புகளுடன் கூட்டிணைந்து **சர்வதேச தகவல் பகிர்வுக்கு உதவுதல்.** உதாரணமாக, வெளிநாட்டு சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுடன் தகவல்களை பரிமாற்றிக்கொள்ள சில நி.உ. பிரிவுகளுக்கு அதிகாரம் இருக்கின்றது. சர்வதேச காவல்துறை மற்றும் ஐரோப்பிய காவல்துறை ஆகியன அடங்கலாக சில சர்வதேச நிறுவனங்களுடன் தகவல்களை பரிமாற்றிக்கொள்ள சில நி.உ. பிரிவுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.
- சில சந்தர்ப்பங்களில், உங்கள் நாட்டிலுள்ள நி.உ.பி. மாதிரியைப் பொறுத்து, நி.உ.பி. உண்மையான புலனாய்வை நடத்தலாம் அல்லது கூட்டு பணிக்குழுக்களில் பங்கேற்கலாம்.

உதவிக்குறிப்பு

உங்களுக்கு எவ்வாறு ஆதரவளிக்க முடியும் என்பதை கண்டறிவதற்கு, ஆரம்ப புலனாய்விலேயே உங்கள் நி.உ. பிரிவுடன் ஈடுபடுதல்.

உதவிக்குறிப்பு

உங்கள் சந்தேக நபர் ஏற்கனவே நி.உ.பி. தரவு தளத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கலாம். உங்கள் சந்தேக நபர் பயணித்துள்ள வெளிநாடுகள் அல்லது அவர்கள் வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்பிய அல்லது பணம் பெற்ற இடங்கள் தொடர்பான கோரிக்கைகள் அடங்கலாக, கிடைக்கக்கூடிய அறிக்கைகளைத் தேடும்படி கோரும் ஒரு கோரிக்கையை நி.உ. பிரிவுக்கு அனுப்புவதை கருத்திற்கொள்ளல்.

பின்வருவனவற்றின் மூலமாக **வழக்குத்தொடரும் முயற்சிகளுக்கு** நி.உ. பிரிவுகள் உதவலாம்:

- நிதி சார்ந்த தகவல் இடைவெளிகள் காணப்படும் போது வழக்குரைஞர்களுக்கு உதவும் பொருட்டு **விசாரணைகளை மேற்கொள்ளல்.**
- **வழக்குக்குத் தொடர்வதற்கு உதவும் பொருட்டு நிதி நிபுணத்துவத்தைப் பெற்றுக்கொடுத்தல்,** சிக்கலான நிதிக் கொடுக்கல்வாங்கள் பற்றி விளக்கமளிக்கும் நிமித்தம் நிபுணத்துவ சான்றுகளை பெற்றுக்கொடுத்தல் இதில் உள்ளடங்கலாம்.

நி.உ. பிரிவுகள் பின்வருவனவற்றின் மூலமாக, **தடுக்கும்** முயற்சிகளுக்கு உதவலாம்:

- **உளவுத்துறை தயாரிப்புகளை** உருவாக்குதல். நியாயாதிக்கங்களின் முழுமையான தகவல்கள் பரிமாற்றிக்கொள்ளப்படுவதற்கு உதவக்கூடிய (அநேகமாக பரஸ்பர உதவியின் அல்லது இராஜதந்திர மார்க்கங்கள் ஊடாக கிடைப்பதை விடவும் விரைவாக) நி.உ. பிரிவிலிருந்து நி.உ.பி. வலைப்பின்னல்களுக்கு ஊடாக வெளிநாட்டு இணைத் தரப்புகளிடமிருந்து வரும் தகவல்கள் இதில் உள்ளடங்கும்.
- **டைப்பொலொஜி ரிபோட்** (சட்டவிரோதமாக நிதிகளை மோசடி செய்ய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழுக்கள் பயன்படுத்தும் முறைகளை பற்றிய நிதி புலனாய்வு பிரிவுகள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய அறிக்கை) உருவாக்குதல் மற்றும் ஒரு குறிப்பிட்ட குற்றத்தை சுட்டிக்காட்டும் நிதி கொடுக்கல்வாங்கல்களையும் கணக்கு விடயங்களையும் கண்டறிவதற்கு ஆராய்ச்சியை நடத்துதல். இது சட்ட அமுலாக்கல் மற்றும் அறிக்கையிடல் நிறுவனங்களின் தடுப்பு மற்றும் புலனாய்வு முயற்சிகளை தெரிவிக்க உதவக்கூடும்.
- சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை இனங்காணுவதற்கு அறிக்கையிடல் நிறுவனங்களின் **ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல்.**
- **தொழில் விழிப்புணர்வு திட்டங்களை** பெற்றுக்கொடுத்தல் மற்றும் தொழில் உறுதிப்படுத்தல் கல்வி மற்றும் ஒழுங்குமுறை தேவைகளை அமுல்படுத்துவது ஆகியவற்றின் மூலம் ஏஎம்எல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு இணங்குதல்.

4.4 வழக்கு ஆய்வு

பின்னணி

2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், மலேசியாவில் இறந்த திமோர்-லெஸ்டேவைச் சேர்ந்த மூன்று புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வழக்கு இந்தோனேசியாவிலுள்ள பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது. ஒரு தொழிலாளரின் குடும்பத்திற்குத் தங்களுடைய குடும்ப அங்கத்தவர் ஒருவர் 2015 செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி அன்று காணாமல் போனதிலிருந்து அவர் வெளிநாட்டில் வேலைக்கமர்த்தப்பட்டார் என்பது தெரியாமல் இருந்தது. ஈஸ்ட் நூஷா டெங்காரா (NTT) வெளிநாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்பும் இந்தோனேசியாவிலுள்ள 9-வது மிகப் பெரிய மாகாணமாகும். இது இந்தோனேசியாவில் புலம்பெயரும் தொழிலாளர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள மாகாணமாகும். 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மதிப்பிடப்பட்டளவில் NTT 4144 தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியிருந்தது. 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 99 NTT தொழிலாளர்கள் இறந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மனிதக் கடத்தல் தொடர்பான பிரச்சினை பற்றி ஆராயுமாறு இந்தோனேசிய ஜனாதிபதி இந்தோனிசிய தேசிய காவல் துறைக்கு அறிவுறுத்தினார். இதன் விளைவாக மனிதக் கடத்தல் பணிக்குழு நிறுவப்பட்டது அத்துடன் அந்த விடயம் பற்றி ஆராயும்படி குபாங் மாவட்ட காவல்துறை தலைமை அதிகாரிக்கு பணிப்பும் விடுத்திருந்தார். புலனாய்வின் போது, இந்தோனேசியாவிலும் மலேசியாவிலும் பரந்து காணப்படுகின்ற 12 மனித கடத்தல் வலையமைப்புகள் கண்டறியப்பட்டன.

பணப் புழக்கம்

2015 ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை, குறித்த குழுமம் வெற்றிகரமாக 2279 புலம்பெயர்ந்த தொழிலாளர்களை மலேசியாவுக்கு அனுப்பியது. அந்த தொழிலாளர்களை அனுப்பிய கொடுக்கல்வாங்கல்களிலிருந்து குறித்த குழுமம் மொத்தம் 563,446.00 அ.டொ. நிதியை சம்பாதித்தது. கிடைக்கக்கூடிய நிதி சார்ந்த கொடுக்கல்வாங்கல்களின் அடிப்படையில் பார்க்கின்ற போது, எல்டாரி விமான நிலையத்தில் சட்டவிரோதமாக முகவராண்மைகளை இயக்கிய குற்றவாளி 2015 சனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 2016 ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 244,125.69 அ.டொ. நிதியை பெற்றிருந்தார். இது 48 குழந்தைகள் அடங்கலாக மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு 1787 நபர்கள் அனுப்பிவைக்கப்பட்டதுடன் தொடர்புடையதாகும்.



இந்தோனேசியாவின் நிதி உளவுத் துறை, PPATK 64 சந்தேக நபர்களின் கொடுக்கல்வாங்கல்களை காட்டிய அறிக்கைகளை பகுப்பாய்வு செய்தது:

- குபாங் மாவட்ட காவல்துறையினரால் விசாரிக்கப்பட்ட 48 தரப்புகள் தொடர்பாக 13.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டது.
- NTT இல் இயங்கும் மனித கடத்தல் வலைப்பின்னல் இணைப்புகள்.
- கிழக்கு நூஷா டெங்காராவில் மனிதக் கடத்தல் நடவடிக்கைகளுக்கு நிதியளித்த நிதியாளர்களை அடையாளம் காண இந்த பகுப்பாய்வு உதவியது.
- பணப் புலனாய்வு பற்றிய அணுகுமுறையைப் பிரயோகிப்பதன் மூலமாக வலைப்பின்னல்களை திட்டமிட்டுக் கண்டறிவதில் குறித்த பகுப்பாய்வு உதவியது.

சிவப்பு கொடிகள்			
எண்.	சிவப்பு கொடிகள் குறிகாட்டிகள்	மாறிகள்	உதாரணங்கள்
1	வாடிக்கையாளர்களின் சுயவிபரங்கள்	தனியார் துறைகள்	• PPTKIS உரிமையாளர்கள்/ஊழியர்கள் (சட்ட மற்றும் சட்டவிரோத) • பணம் மாற்றுவோர் • பயண மற்றும் பயண வணிகத்தின் உரிமையாளர்/பணியாளர் • விமான சேவைகள் • சரக்கு/போக்குவரத்து சேவைகள் • வாடகை சேவைகள்
		பொதுத் துறைகள்	• குடிவரவு அதிகாரிகள் • விமானப் பாதுகாப்பு • இராணுவ வீரர்கள் • காவல்துறை அதிகாரிகள்
2	அடிப்படை பரிவர்த்தனைகள்	முக்கிய வார்த்தைகள்	குழந்தைகள்/குழந்தை; மக்கள்; டிக்கெட்; உணவுக் கொடுப்பனவு; வீட்டுப் பணிப்பெண்கள்; பிரயாணக் கடவுச்சீட்டுக் கட்டணம்; பயணம்; பணிப்பெண்கள்; ஆர்.எம்; கட்டணம் செலுத்தல்; குழந்தைச் சம்பளம் போன்றவை.
3	பரிவர்த்தனைகளின் வழி	வங்கி முறை	• ஓவர் புக்கிங் • ஏடிஎம் மூலம் பரிமாற்றம் • IB/MB வழியாக பரிவர்த்தனைகள் • தந்திப் பரிமாற்றங்கள்
4	பரிவர்த்தனை முறைகள்	பணக் கலத்தல்	PPATKIS உரிமையாளர்கள்/ஊழியர்கள் என அழைக்கப்படும் பல தரப்புகளின் கணக்குகளில் காணப்படும் குற்றத்தின் மூலமான வருமானம் அடங்கலாக சட்டமுறையான வணிக இலாபங்கள் கலப்பு. குற்றத்தின் மூலமான உண்மையான வருமானத்தை ஒழித்து மறைக்கும்/மறைக்கும் அறிகுறி.
5	கள ரீதியாக ஆட்சேர்த்தல், தங்குமிடம், சொந்த ஊரிலிருந்து எடுத்துச்சென்று சேர்க்கப்படும் மற்றும் அடையும் நகரங்களுக்கான/நாடுகளுக்கான பயணம், ஆவணங்கள் மோசடி மற்றும் அரசாங்க பொறிமுறைக்கான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் ஆகிய கட்டங்களுடன் மனித கடத்தல் செயற்பாடுகள் தொடர்புபடுவதிலும் நிதி சார்ந்த கொடுக்கல்வாங்கல் பகுப்பாய்வு உதவியது. கணக்கு வைத்திருப்பவர்களின் சுயவிபரங்கள், கொடுக்கல்வாங்கல் திகதி, கொடுக்கல்வாங்கல் தொகை மற்றும் கொடுக்கல்வாங்கல் இடங்கள் என்பவற்றிலிருந்து கிடைக்கும் தகவல்களை பயன்படுத்துவதன் மூலமான முறையை பொருந்தச்செய்யும் முறையை புலனாய்வுத் துறை பயன்படுத்தியது.		

விளைவுகள்

குபாங் மாவட்ட காவல்துறை புலனாய்வாளர்கள் 11 வலைப்பின்னல்களை உடைத்து 32 சந்தேக நபர்களை அடையாளம் கண்டனர். 32 சந்தேகநபர்களில், 11 சந்தேக நபர்கள் மனிதக் கடத்தல் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டு 2 முதல் 9 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். நீதிமன்றம் 9,230.00 அமெரிக்க டொலர் முதல் 153,800.00 டொலர் வரை அபராதத்தை விதித்ததுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இறந்தவர்களின் குடும்பத்திற்கு 77.00 அமெரிக்க டொலர் முதல் 4,230.00 அமெரிக்க டொலர் வரை நஷ்டஈடுகளை வழங்கவும் உத்தரவிட்டது. நபர்கள் கடத்தல் வழக்கில் ஒரு விமான நிலைய குடிவரவு அதிகாரிக்கு, 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது, 15,300.00 அமெரிக்க டொலர் அபராதத்தை செலுத்தவும், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு 77.00 அமெரிக்க டொலர் நஷ்டஈட்டுத் தொகையை வழங்கவும் நேர்ந்தது.

பிரிவு 5: புலனாய்வு

5.1 ஒரு நிதிப் புலனாய்வு என்றால் என்ன?

நிதிப் புலனாய்வு என்பது குற்றவியல் விசாரணை நடவடிக்கைகளில் சந்தேக நபர் ஒருவரின் அல்லது சாட்சியாளர் ஒருவரின் நிதி வரலாற்றையும் செயற்பாட்டையும் பல மூலங்களிலிருந்தும் தகவல்களையும், புலனாய்வு விடயங்களையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கு பிரயோகிக்கப்படும் ஒரு புலனாய்வு நுட்பமாகும். ஒரு நிதிப் புலனாய்வு குற்றத்தை செய்ய தயாராகுவதற்காக முதலீடு செய்யப்பட்ட பணம், குற்றம் செய்தல், குற்றத்தை செய்யும் போது ஏற்படும் செலவுகள், குற்றத்தை செய்வதால் கிடைக்கும் இலாபங்கள், கொடுப்பனவுகள் என்பன அடங்கலாக குற்றத்துடன் தொடர்புடைய சகல நிதி அம்சங்களையும் ஆராயும்.

பணத்தூய்தாக்கல் குற்றம் நிதிச் செயல்பாட்டின் எந்த கட்டத்திலும் ஏற்புடையதாகலாம். **குற்றத்தில் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அல்லது ஒரு குற்றத்திலிருந்து சந்தேகிக்கப்படுவதற்கு ஏதுவான அல்லது** தெரிந்த பணத்தை அந்த நபர் கையாண்டார் என்பதை உறுதிசெய்யும் முக்கிய தேவைப்பாடு இருக்கின்றது. சந்தேகத்திற்கிடமான அல்லது அசாதாரண செயல்பாட்டை ஊகிக்க வெவ்வேறு தகவல் மூலங்களை ஒன்றிணைப்பதன் மூலம் இதனை அடையலாம்.

உதவிக்குறிப்பு

ஒரு குற்றம் புரியப்படும் நேரத்தில் **பணத்தின் நகர்வை** இனங்கண்டு பதிவதும், குற்றத்திலும் வருமானத்திலும் சம்பந்தப்படும் ஏனைய நபர்களை அடையாளம் காணுவதும் நிதிப் புலனாய்வின் முக்கிய குறிக்கோள்களாகும். பணம் எங்கிருந்து வருகின்றது, அந்தப் பணம் யாருக்கு கிடைக்கின்றது, அது எப்பொழுது கிடைக்கின்றது, அது எங்கு சேமிக்கப்படுகின்றது அல்லது வைப்புச்செய்யப்படுகின்றது முதலிய விடயங்களுக்கு இடையிலான தொடர்பு **குற்றச்செயலை நிரூபிப்பதற்கான சான்றுகளை வழங்கும்.**

5.2 பணம் எப்படி, எங்கு நகர்ந்துள்ளது என்பதை உங்களால் எவ்வாறு நிரூபிக்க முடியும்?

பணத்துடன் சம்பந்தப்படுகின்ற சம்பவங்களின் தடயத்தை காட்டுகின்ற அல்லது அதனுடன் தொடர்புபடுகின்ற எந்தவொரு பதிவும் முக்கியமானதாகும். சில நாடுகளில் பணத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரங்கள் காணப்படுகின்ற வேளையில், இலத்திரனியல் வங்கி முறைமைகள், கேபெல் முறையிலான மாற்றல்கள், வங்கி அட்டைகள், இன்டர்நெட் வங்கியியல் முதலிய வசதிகளை மக்கள் அதிகளவில் பயன்படுத்துகின்றனர் - இவை அனைத்தும் சில தடயங்களை விட்டுச்செல்கின்றன. எனினும், பண அடிப்படையிலான கொடுக்கல்வாங்கலில் கூட விலைப்பட்டியல், ஒப்பந்தம், பற்றுச்சீட்டு அல்லது கணக்கு புத்தகம் முதலியன போன்ற உருவாக்கப்பட்ட ஒரு பதிவு இன்னும் இருக்கக்கூடும். இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது வேறு கொடுக்கல்வாங்கல்கள் ஆகிய இந்த வகையான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட பதிவுகள் என்பன அநேகமாக அதிக தகவல் மூலங்களை அல்லது சான்றுகளை புலனாய்வாளர்களுக்கு வழங்குகின்றன.

பண நகர்வு அல்லது பணத்தின் பெறுமானம் தொடர்பான தகவல் மூலம், புலனாய்வு அல்லது சான்று என்பன புலனாய்வின் தன்மையை பொறுத்து வேறுபடும். எனினும், அநேகமான புலனாய்வுகளில் அதிகளவான பொது மூலங்கள் வழமையாக பயன்படுத்தப்படுகின்றன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தாலும் மட்டுப்பட்டவை அல்ல:

- சந்தேக நபர் (பாக்கெட் குப்பை)
- போக்குவரத்து / கப்பல்சரக்குகளை எடுத்துவருதல்
- ஏனைய வணிகங்களும் தொழில்களும்
- கையடக்கத் தொலைபேசிகள்
- நிதி நிறுவனங்கள்
- ஏனைய நிறுவனங்கள்
- காப்புறுதி நிறுவனங்கள்
- வாகனப் பதிவுகள் திணைக்களம்
- கடன் முகவராண்மைகள்
- காணிப் பதிவகம்
- ஓய்வூதிய வழங்குநர்கள்
- வரி அதிகாரங்கள்/சமூக பாதுகாப்பு
- அரசாங்க பதிவாளர்களும் அதிகாரிகளும்
- அடிக்கடி பறக்கும் விமான மற்றும் ஹோட்டல் உறுப்பினர் அட்டைகள் போன்ற விசுவாச மேம்பாட்டு அட்டைகள்

மூன்று குறிப்பிட்ட ஆதாரங்கள் சிறப்பம்சமாக உள்ளன: (1) நிதி நிறுவனங்கள், மிகவும் பிரபலமான தகவல்கள் மூலங்களிலொன்றான நிதி நிறுவனங்கள் ஒன்றாகும்; (2) பயன்பாட்டுக் கட்டணங்கள்; மற்றும் (3) பெறுமதியான தகவல்களை வழங்கும் விசுவாச மேம்பாட்டு அட்டைகள், ஆயினும் இவை அதிகளவில் பயன்படுத்தப்படுவதில்லை.

நிதி நிறுவனங்கள்

கணக்கின் முழுமையான வரலாறுகள் அடங்கலாக கணக்குகள் திறத்தல் பதிவுகள் (எடுத்துரைக்கப்பட்ட ஆளடையாளம், தொழில், வெளிப்படுத்தப்பட்ட வருமானம் பயனுள்ளதாக இருக்கும்) நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களில் அடங்கும். காசோலைகள், கடன் உறுதிச்சீட்டுக்கள் மற்றும் ஏனைய கொடுக்கல்வாங்கல் ஆவணங்கள் என்பன அடங்கலாக கடன்களையும், பற்றுக்களையும், நிலுவைகளையும் சுட்டிக்காட்டி கிடைக்கக்கூடிய வங்கிக் கூற்றுக்களை பிரதிசெய்துகொள்ளல். கணக்கின் வணிகத்தின் போது வங்கி அதிகாரிகள் ஏதேனும் எழுதப்பட்ட குறிப்புகள் செய்திருக்கலாம். கடன் அட்டையின் அல்லது பற்று அட்டையின் பாவனைக்கு இந்தத் தகவல்கள் தனிநபரின் நகர்வுகள், அவர்கள் உணவு உண்ணும் உணவகங்கள், கொள்வனவு செய்யப்படும் பொருட்கள், அவர்கள் அடிக்கடி செல்லும் இடங்கள், அவர்கள் செல்லும் க்ளப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் என்பன பற்றிய தகவல்களை பதிவதில் பயனுள்ளதாக இருக்கலாம். இது மற்றைய கணக்குகள் இருத்தல், பாதுகாப்பை உறுதிப்படுத்தல் அல்லது செல்லுபடியற்றதாக்கல், செலவுகளையும் வாழ்க்கைப் பாணிகளையும் கணிப்பிடுதல், குற்றத்துடன் தொடர்புடைய ஏனைய நபர்களை இனங்காணுதல் என்பவற்றுக்கு வழிவகுக்கலாம். உண்மையான நேரத்தில் மதிப்பிடப்படும் போது, தனிநபர்கள் இருக்கும் இடங்களைக் கண்டறியவும் இந்த தகவல்கள் பயன்படலாம்.

பயன்பாட்டுக் கட்டணங்கள்

பயன்பாட்டு நிறுவனங்களுடனான விசாரணைகள் வதிவிட நிலையை உறுதிப்படுத்துவதற்கு மேலதிகமாக, பெரும்பாலும் முன்னர் அறியப்படாத கணக்குகள் இருக்கின்றமையை, நிதி கொடுக்கல்வாங்கல்களை அல்லது சேவைகளுக்காக கட்டணங்களைச் செலுத்தும் ஏனைய தோழர்கள் இருப்பதை வெளிப்படுத்தலாம். இது போன்ற ஒரு விதத்தில், தொலைபேசி மற்றும் இணைய வசதிகளை வழங்குபவர்களின் விடயமும் அக்கறையுடைய ஏனைய நபர்களையும் குற்றத்துடன் சம்பந்தப்படும் ஏனைய நபர்களையும் அடையாளம் காணுவதற்கு வழிவகுக்கலாம்.

விசுவாச மேம்பாட்டு அட்டைகள்

வன்-வேர்ல்ட், ஸ்டார் எலயான்ஸ் அல்லது ஸ்கை குழு வழங்கும் அடிக்கடி பயணிப்பதற்கான விமான உறுப்பினர் அட்டை, அல்லது ஹில்டென், ஸ்டார்வூட் அல்லது மாரியொட்டு முதலிய ஹோட்டல்கள் வழங்கும் ஹோட்டல் இணைப்பு விசுவாச மேம்பாட்டு அட்டை வளமான தகவல்களை வழங்கக்கூடும். வாடிக்கையாளர் சுயவிபரம், அவரின் பெயர், முகவரி, மின்னஞ்சல் மற்றும் கையடக்கத் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் சேவைகளுக்கு பணம் செலுத்த பயன்படுத்தப்படும் வங்கி/கடன் அட்டை என்பன இதில் அடங்கும். இந்த நேரங்களில் பயணித்த விமானங்கள், சென்ற ஹோட்டல்கள் பற்றிய விபரங்களும், பிரயாணியுடன் துணைக்கு சென்றவர்களின் விபரங்களும் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

உதவிக்குறிப்பு

உங்களின் சந்தேக நபர் குடும்ப உறுப்பினர்களின் அல்லது நெருங்கிய தனிப்பட்ட வணிக நண்பர்களின் பெயரில் பணத்தை மறைத்து வைத்திருக்கலாம். உங்களின் சந்தேக நபர் சார்பாக பணத்தை வைத்திருக்கும் அல்லது நகர்த்தும் இந்த நபர்களை உங்களின் ஆய்வில் உள்ளடக்குகின்றீர்களா என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள்.

5.3 தகவல்களையும் சான்றுகளையும் சேகரித்தல்

இணையான நிதிப் புலனாய்வுகள் ஒட்டுமொத்த மனிதக் கடத்தல் பற்றிய புலனாய்வின் பாகம் என்பதால் அதனை உறுதிப்படுத்துவது சிறந்த செயன்முறையாகும். புலனாய்வாளர்களுக்கும், நி.உ. பிரிவுகளுக்கும், வழக்குரைஞர்களுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு மனிதக் கடத்தல் குற்றம் தொடர்பான புலனாய்வுக்கு மேலும் பெறுமதி சேர்க்கும் என்பதுடன் பணத்தூய்தாக்கலுக்கு எதிரான சர்வதேச நியமங்களை உங்கள் நாடு பின்பற்றுவதற்கும் உதவும்.

உதவிக்குறிப்பு

மனிதக் கடத்தல் தொடர்பான சகல குற்றங்களுக்குமான உங்களது புலனாய்வில் கூட்டிணையும் **செயல்திறனுடைய இணையான நிதிப் புலனாய்வை** மேற்கொள்ளல். நீங்கள் பெற்றுக்கொள்ளும் சான்று, எதிர்வுகூறும் குற்றத்தை எண்பிப்பதற்கும் அதே நேரம் பணத் தூய்தாக்கல் தொடர்பான தனித்தனி குற்றத்தை உறுதிசெய்யவும் உதவக்கூடும்.

உங்கள் நிலையான இயக்க நடைமுறைகளுக்கான விசாரணையின் ஒரு பகுதியாக இது **நிதி விசாரணை சரிபார்ப்பு பட்டியலாக** இருக்கலாம்.

உதவிக்குறிப்பு

குற்றங்கள் முழுமையாக விசாரிக்கப்படுவதை உறுதி செய்யத் தொடர்புடைய அனைத்து முகவராண்மைகளும் (புலனாய்வாளர்கள், உ.நி.பிரிவுகள் மற்றும் வழக்குரைஞர்கள் உட்பட) முழுமையாக இணைவதை உறுதிசெய்க.

இணைய வசதிகள் மற்றும் கம்பனிகள் அல்லது காணிப் பதிவுகள் (திறந்த) மற்றும் நிதி நிறுவனங்கள் அல்லது வரிப் பதிவுகள் (மூடிய) என்பன போன்ற திறந்த அல்லது மூடிய மூலங்களிலிருந்து தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும், தகவல்களை அணுகும்போது, நிதிப் புலனாய்வாளர்கள் தமது உள்நாட்டு சட்ட கட்டமைப்பினுள் செயல்படவும் மற்றும் அத்தகைய விசாரணைகள், மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வுக்கு சம விகிதத்தில் அவசியப்படும் (PLAN) சட்டமுறையான பொறுப்புக்கூறக்கூடியதாக இருக்கின்றன என்பதை நியாயப்படுத்தக்கூடியவர்களாக இருக்கவும் வேண்டும். வாடிக்கையாளரின் இரகசியத்தன்மையையும் நபர் ஒருவரின் தனித்துவத்திற்கான அடிப்படை உரிமை மீறலையும் வெற்றிகொள்வதற்கு புலனாய்வாளர்களுக்கு உதவக்கூடிய ஆற்றலை கிடைக்கச்செய்யும் தலையீட்டு அதிகாரங்களை எண்பிப்பதற்கு இவை முக்கியமான விடயங்களாகும். கடுமையான கட்டுப்பாடுகளும் அணுகு நிலைமைகளும் எல்லா நேரங்களிலும் பேணப்படுதல் வேண்டும்.

உதவிக்குறிப்பு: நீங்கள் எண்பிக்க கூடிய வகையில் உங்கள் விசாரணைகள் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்:

- **சம விகிதம்**
  - குறித்த நடவடிக்கை அச்சுறுத்தலுக்குச் சம விகிதமா?
  - குறிக்கோளை அடைய குறைந்த ஊடுருவும் முறை உள்ளதா?
- **சட்டமுறையானது**
  - குறித்த நடவடிக்கைக்குச் சட்ட அடிப்படை உண்டா?
  - இந்த நடவடிக்கை மனித உரிமைகள், தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மைத் தேவைப்பாடுகள் உள்ளிட்ட சட்டபூர்வமான கடமைகளுடன் ஒத்துள்ளதா?
- **பொறுப்புக்கூறக்கூடியது**
  - தீர்மானங்கள் பொறுப்புக்கூறக்கூடியனவா?
- **அவசியம்**
  - குறித்த நடவடிக்கை அவசியமா?
  - விசாரணைக்கு தகவல் குறிப்பிடத்தக்க மதிப்புடையதா?

ஒரு வழக்கு மேலாண்மை முறையின் பயனுள்ள பயன்பாடு, எவ்வளவு அடிப்படை என்றாலும், ஒரு நிதிப் புலனாய்வுக்கு அவசியமாகும். பெற்றுக்கொள்ளப்படுகின்ற தகவல்களின் அளவு பெரியதாக இருக்கும். எங்கிருந்தாவது பெற்றுக்கொள்ளப்படுகின்ற தகவல்களின் தெளிவான ஒரு பதிவு பின்னர் புலனாய்வின் அல்லது விசாரணையின் போது ஏதாவது கஷ்டங்களை நீக்குவதற்கு உதவும். சில வகையான கொள்கை அல்லது தீர்மானப் பதிவுகளை வைத்திருப்பது ஒரு சில தலையீட்டு நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்பட்டன என்பது பற்றி பின்னர் பொறுப்புக்கூறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்ற நேரத்திலும் உதவலாம்.

எச்சரிக்கை

பறிமுதல் செய்வதற்கான சட்டபூர்வமான அடிப்படையை நிரூபிக்க இயலாமை காரணமாக அல்லது ஆவணம் எப்போது, எங்கு கைப்பற்றப்பட்டது எனும் தொடர் நிகழ்வினை நிரூபிக்க இயலாமை காரணமாக பல வழக்குகள் நிலையற்ற ஆவண முகாமைத்துவத்தின் விளைவாக இழக்கப்பட்டுள்ளன.

உதவிக்குறிப்பு

உங்கள் விசாரணை முழுவதும் நீங்கள் பெற்ற நிதித் தகவல்களைக் கண்காணிக்க வழக்கு முகமைத்துவ முறையைப் பயன்படுத்தவும்.

உதவிக்குறிப்பு

நீங்கள் கைப்பற்றிய ஆவணங்கள் தனித்தனியாக பெயரிடப்பட்டு, கைப்பற்றப்பட்ட ஒழுங்கில் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்ட ஒரு பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும்.

5.4 வழக்கு ஆய்வு

மே ஜா கிம், அவுஸ்திரேலியாவில் பணத்தூய்தாக்கலுக்கு எதிரான சட்டத்தின் கீழ் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விபச்சாரத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வருகின்றார்.

நல்ல ஊதியத்துடன் சிறந்த வசதிகள் செய்து தரப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்டு தென்கிழக்கு ஆசியாவில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரத்திற்கு கொண்டுவரப்பட்ட 100 க்கும் மேற்பட்ட பெண் பாலியல் தொழிலாளர்களின் வருவாயின் ஒரு விகிதத்தில் மே ஜா கிம் ஒரு பகட்டான வாழ்க்கை முறையை வாழ்ந்தார். பாலியல் தொழிலாளர்களை வைத்து தொழிலை நடத்துவதற்கோ அல்லது வருவாயில் ஏதேனும் ஒரு விகிதத்தை எடுத்துக்கொள்வதற்கோ அவளுக்கு உரிமம் இல்லை, ஆனால் அவள் அவ்வாறு செய்தாள். பாலியல் தொழிலாளர்களை மேற்பார்வையிட உரிமம் பெறாத ‘கண்காணிப்பாளர்களை’ கிம் பயன்படுத்தினார். மேலும் பெண்கள் செய்கின்ற வேலையின் அளவை அதிகரிக்க கிம் கண்காணிப்பாளர்களுடன் சந்திப்புகளை மேற்கொண்டு குறைவான செயலாற்றுகையுடைய பெண்களுக்கு அபராதம் விதித்தார். பொலிசார் விசாரிக்கும் நேரத்தில் அவர் 12 மொபைல் போன்களை பொய்யான பெயர்களில் பயன்படுத்திக்கொண்டிருந்தார். கிம்மின் இணைக் குற்றவாளிகள் பாலியல் தொழிலாளர்கள் உட்பட தினசரி நடவடிக்கைகளை நடத்துவதற்கு உதவினார்கள், வருவாயைச் சேகரித்தனர் மற்றும் பணிப் பட்டியல்களை ஒழுங்கமைத்தனர். தொழிலாளர் கொடுப்பனவு சுருக்கங்களின் பகுப்பாய்வு, கிம் தனது குற்றங்களிலிருந்து எவ்வளவு பணம் சம்பாதித்துள்ளார் என்பதைக் காட்டியதுடன் அதனால் அவருக்கு 2,509,000.00 அவுஸ்திரேலிய டொலர் அபராதமும் விதிக்கப்பட்டது.

‘பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு’ மூலம், விபச்சார விடுதிகளை நிர்வகித்தல் மற்றும் மனிதக் கடத்தல் ஆகியவற்றில் கிம் நேரடியாக ஈடுபட்டுள்ளார் என்பதை புலனாய்வாளர்கள் காட்ட முடியும். இக் குற்றங்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பிரதிபலன்கள் கண்டுபிடிக்கப்பட்டது போலவே அவளது ஆடம்பரமான வாழ்க்கை முறைக்கான காரணமும் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் மூன்று குடியிருப்புகள் மற்றும் மெல்போர்னில் ஒரு வீடு, மற்றும் ஆடி 6, மெர்சிடிஸ் பென்ஸ் இ 500 மற்றும் கிராண்ட் ஜீப் செரோகி உள்ளிட்ட பல சொகுசு கார்கள் உள்ளன. ஒவ்வொரு பெண்ணிற்கும் செலுத்தப்படவேண்டிய தொகைகள் மற்றும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அத்துடன் அவுஸ்திரேலிய சட்ட அமுலாக்க முகவராண்மைகளிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு ஆகியவை அடங்கிய திருத்தி எழுதிவைக்கப்பட்டிருந்த ‘குறிப்புகள்’ வழக்கின் வெற்றிக்கான முக்கிய காரணங்களாகும்.

2013 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட நேரத்தில் செல்வி கிம்மின் சொகுசு சவுத் பேங்க் குடியிருப்பில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள், வாசனை திரவிய பாட்டில்கள், ஆடம்பர காலணிகளின் அடுக்குகள், வடிவமைப்பாளர் கைப்பைகள் மற்றும் இரண்டு காப்புப் பெட்டகங்கள் ஆகியன அவளின் ஆடம்பர வாழ்க்கையினைக் காட்டுகின்றன.

குற்றத்திலிருந்து பெறப்பட்ட அவரது 2.5 மில்லியன் டொலர் இலாபத்திலிந்து, கிம் பிராடா தயாரிப்புகளுக்காக 202,000 டொலர்களையும், ககி தயாரிப்புகளுக்காக 115,000 டொலர்களையும் மற்றும் ஹெர்ம்ஸ் தயாரிப்புகளுக்காக 24,000 டொலர்களையும் செலவிட்டதாக நிதி புலனாய்வாளர்கள் காட்டினார்கள். அடுக்குமாடிக் குடியிருப்புகள், வீடு மற்றும் கார்கள் உள்ளிட்ட இந்த இலாபங்கள் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் அவுஸ்திரேலியாவின் *2002 இன் குற்ற வருமானச் சட்டத்தின் கீழ்* பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்டன.

பிரிவு 6: சர்வதேச ஒத்துழைப்பு

குறிப்பு: சர்வதேச ஒத்துழைப்பை எவ்வாறு வழிநடத்துவது என்பது குறித்து விரிவாகக் குறிப்பிடுவதை இந்த பகுதி நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. இந்த விடயத்தில் காணப்படும் புள்ளிவிபர சான்றுகளின் பரம்பலைக் குறிப்பிடுகிறது. நிதி விசாரணையை ஆதரிக்க சர்வதேச ஒத்துழைப்பு வழிமுறைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் இது கவனம் செலுத்துகிறது.

6.1 சர்வதேச ஒத்துழைப்பு ஏன் முக்கியமானது?

வெற்றிகரமான சர்வதேச குற்ற ஒத்துழைப்பு வழிமுறைகள் நாடுகடந்த குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஒரு முக்கிய கருவியாக அமைவதுடன் பணத்தூய்தாக்கல் தடுப்பு அமைப்பின் முக்கிய அம்சமாகவும் விளங்குகின்றது. நிதி விசாரணைகளை ஆதரிக்க சர்வதேச ஒத்துழைப்பு பெரும்பாலும் தேவைப்படுவதற்கான முக்கியமான காரணங்கள் பின்வருமாறு:

- நிதி விசாரணையை ஆதரிக்க மற்றொரு நியாயாதிக்கத்திலிருந்து **சான்றுகளைப்** பெற்றுக்கொள்வதற்கு, மற்றும்
- மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கு அல்லது நட்டஈடு வழங்குவதற்காக **குற்றத்தின் வருமானத்தை** மற்றும்/அல்லது **கருவிகளை** மற்றும்/அல்லது சொத்துக்களை, இனங்காணுதல், கட்டுப்படுத்துதல், பறிமுதல் செய்தல் மற்றும் சொந்த தேசத்திற்கு திருப்பி அனுப்புதல்.

6.2 நிதி விசாரணைகளை ஆதரிக்க பொதுவாக பயன்படுத்தப்படும் சர்வதேச ஒத்துழைப்பின் முறைமைகள்

சர்வதேச எல்லைகளில் பியர்-டு-பியர் தொடர்பு நிறுவ அதிகாரிகளுக்கு உதவ முறைசாரா வழிமுறைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். முறையான பரஸ்பர உதவி கோரிக்கை முன்வைக்கப்படுவதற்கு முன்னர் முறைசாரா ஒத்துழைப்பு பயனளிக்கும். முறைசாரா ஒத்துழைப்பு வழிமுறைகள் பின்வருமாறு:

- **ஒரு முகவராண்மைக்கும் மற்றுமொரு முகவராண்மைக்கும் இடையேயான தொடர்பு** (இதன் மூலம் ஒரு காவல்துறையினருக்கும் மற்றுமொரு காவல்துறையினருக்கும் இடையேயான தொடர்பை அல்லது ஒரு உ.நி. பிரிவிற்கும் மற்றுமொரு உ.நி.பிரிவிற்கும் இடையேயான தொடர்பை குறிக்கலாம்)
- **சர்வதேச காவல்துறை வழிகள்** (இது ஒரு நபருக்கு அழைப்பாணை வழங்குவதை உள்ளடக்கும், இதனால் அவனது/அவளது நிதி செயற்பாடு கண்டறியப்படும்)
- **புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது ஒத்த ஒப்பந்தங்கள்,** மற்றும்
- பணத்தூய்தாக்கல் எதிர்ப்பு மற்றும் சொத்து மீட்பு பற்றிய **முறைசாரா நெட்வொர்க்குகள்**
  - இந்த முறைசாரா வழிமுறைகளில் ஏ.ஆர்.ஐ.என்- ஏ.பீ. (ஆசியா பசிபிக் நிறுவனத்திற்கான சொத்து ஊடாடும் வலையமைப்பு), ஒரு காவல்துறையினருக்கும் மற்றுமொரு காவல்துறையினருக்கும் இடையேயான தொடர்பு (வெளிநாட்டுக் காவல்துறைத் தொடர்பு பதிவுகள்/சட்ட இணைப்புகள்), மற்றும் ஒரு உ.நி.பிரிவிற்கும் மற்றுமொரு உ.நி.பிரிவிற்கும் இடையேயான தொடர்பு வழிமுறைகள் (எக்மொன்ட் பாதுகாப்பான வலைத்தளம்) என்பன உள்ளடங்கும்.

உதவிக்குறிப்பு

உங்கள் நாடு ஏற்கனவே ஆசியா பசிபிக் நிறுவனத்திற்கான சொத்து ஊடாடும் வலையமைப்பில் (ஏ.ஆர்.ஐ.என்- ஏ.பீ.) உறுப்பினர்களாக இல்லாவிட்டால், அவற்றில் சேர உங்கள் நாட்டை ஊக்குவிக்கவும். ஆசியா பசிபிக் நிறுவனத்திற்கான சொத்து ஊடாடும் வலையமைப்பு (ஏ.ஆர்.ஐ.என்- ஏ.பீ.) என்பது தொழில்வல்லுநர்களின் முறைசாரா வலையமைப்பாகும். இது பல நிறுவன மட்டத்தில், குற்றவாளிகளின் சட்டவிரோத இலாபங்களை பறிமுதல் செய்வதற்கான உறுப்பினர்களின் முயற்சிகளை ஆதரிக்கின்றது.

ஆசியா பசிபிக் நிறுவனத்திற்கான சொத்து ஊடாடும் வலையமைப்பில் (ஏ.ஆர்.ஐ.என்- ஏ.பீ.) உறுப்புரிமை தொடர்புடைய செலவுகள் எதுவும் இல்லை. உறுப்புரிமை முற்றிலும் தன்னார்வமானது மற்றும் தகவல்களை வழங்குமாறு அல்லது கோரிக்கைகளுக்கு பதிலளிக்குமாறு நாடுகளைக் கடமைப்படுத்தாது.

தகவல்களை www.arin-ap.org/main.do இல் காணலாம்.

பரஸ்பர சட்ட உதவி என்பது மற்றொரு **நியாயாதிக்கத்திலிருந்து முறையாக சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான** ஒரு அரசாங்கத்திலிருந்து மற்றுமொரு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பைப் பெறுவதற்கான முக்கிய முறையாகும். முறைசாரா வழிமுறைகளின் மூலம் உதவி வழங்க முடியாதபோது உதாரணமாக, பிற நாட்டிற்கு பரஸ்பர சட்ட உதவி கோரிக்கை தேவைப்படுமிடத்து அல்லது கோரப்பட்ட சான்றுகள் நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படும் கட்டாய வழிகளைப் பயன்படுத்த உதவி வேண்டப்படும் போது பரஸ்பர சட்ட உதவி தேவைப்படுகின்றது.

மீண்டும் தாயகத்திற்கே திருப்பி அனுப்பப்படுகின்ற தண்டனை பெறும் ஒரு குற்றம் தொடர்பில் ஒரு குற்றவியல் வழக்கை எதிர்கொள்வதற்கு அல்லது ஒரு குற்றவியல் தண்டனையை அனுபவிப்பதற்கு **ஒரு நியாயாதிக்கத்திற்குள் குற்றவாளியைக் கொண்டுவருவதற்கு ஒப்படைப்பு** தேவைப்படலாம். ஒப்படைப்பு கோரிக்கையானது சொத்து கண்டுபிடிப்பின் நோக்கத்திற்காக நிதி விசாரணையை ஆதரிக்க பயனுள்ளதாக இருக்கும். சர்வதேச ஒத்துழைப்பின் ஏனைய முறைமைகளில் தண்டனை பெற்ற கைதிகளை மாற்றுவது, ஒத்துழைப்பைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சிறப்பு புலனாய்வு நுட்பங்கள் மற்றும் கூட்டு விசாரணைகள் ஆகியவை அடங்கும்.

6.3 முக்கியமான பரிசீலனைகள்

உங்கள் விசாரணையை ஆதரிக்கச் சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதில் முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

- வேறொரு நாட்டில் அமைந்துள்ள மனிதக் கடத்தலின் சான்றுகள், குற்றவாளிகள், பாதிக்கப்பட்டவர்கள் அல்லது குற்றத்திலிருந்து பெறப்படுகின்ற வருமானம் உள்ளதா என்பதைத் தீர்மானிக்க ஆரம்ப விசாரணைகளுக்கு முறைசாரா வழிமுறைகளைப் பயன்படுத்தவும்.
- கிடைக்கக்கூடிய முறையான மற்றும் முறைசாரா தகவல் பகிர்வு வழிகளைப் புரிந்துகொள்ள உங்கள் விசாரணையின் ஆரம்பத்தில் சர்வதேச ஒத்துழைப்பு, நி.உ.பி மற்றும் வழக்குரைஞர்களுக்காக உங்கள் மத்திய அதிகாரசபையுடன் விசாரணையின் ஆரம்பத்தில் கலந்தாலோசிக்கவும்.
- ஏனைய நாட்டிலுள்ள இணைத் தரப்புக்களுடன் ஆரம்ப கட்டத்தில் தொடர்பு கொள்ளுங்கள். முறைசாரா நெட்வொர்க்குகள் மூலம் தகவல்களை வழங்க முடியுமா அல்லது பரஸ்பர சட்ட உதவி தேவையா என்பதை தெளிவுபடுத்த இது உதவும். எழக்கூடிய எந்தவொரு சட்ட சிக்கல்களையும் அடையாளம் காணவும், தேவைகளை தெளிவுபடுத்துவதற்காக பரஸ்பர சட்ட உதவியைக் கோரவும் இது உதவக்கூடும்.
- பரஸ்பர சட்ட உதவி தேவைப்பட்டால்:
  - நீங்கள் தகவல்களைக் கோரும் நாட்டின் தேவைப்பாடுகளைத் தெளிவுபடுத்துங்கள்.
  - நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள். அவற்றை அடைய நீங்கள் பின்பற்ற வேண்டிய படிமுறைகள் யாவை என்பதையும் தெளிவாகக் குறிப்பிடவும்.
    - இதில் சொத்து அடையாளம் காணல், நன்மை பெறும் நபரின் உரிமையை நிறுவுதல், முன்னறிவிக்கப்பட்ட குற்றத்தை நிரூபித்தல் மற்றும் கட்டுப்பாடுக்கான கோரிக்கை, பறிமுதல் மற்றும் சொத்தை திருப்பி அனுப்புதல் ஆகியவை அடங்கும்.
  - உங்கள் கோரிக்கை விரிவானது மற்றும் கோரப்பட்ட நாட்டிற்குத் தேவையான அனைத்து தகவல்களும் ஆவணங்களும் இதில் அடங்கும் என்பதை உறுதிப்படுத்தவும்.
  - ஆதாரங்கள் வழங்கப்பட வேண்டிய படிவங்கள் குறித்து தெளிவாகக் குறிப்பிடுங்கள்.
  - உங்கள் கோரிக்கையுடன் இணங்குவதற்கான யதார்த்தமான காலக்கெடுவை வழங்கவும் (பெறுநருடன் முன்பே கலந்தாலோசிக்கவும்).
  - வெளிநாட்டில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனுமொன்றை பறிமுதல் செய்வதற்கான அல்லது தடை செய்வதற்கான உத்தரவைப் பெற்றுக்கொள்ள நீங்கள் விரும்பினால், உங்கள் கோரிக்கை வெளிநாட்டின் சட்ட அமைப்பின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது என்பதை உறுதிப்படுத்தவும்.
- நீங்கள் கடமை செய்யும் வெளிநாட்டில் பறிமுதல் மற்றும் அரசுடமையாக்கல் செய்வதற்கான கட்டமைப்பைப் பற்றியும், பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் அவர்களின் திறனைப் பற்றியும் அறிந்து கொள்ளுங்கள்.

ஒரு மனிதக் கடத்தல் வழக்கில் நிதி விசாரணைக்கு சர்வதேச ஒத்துழைப்பைப் பயன்படுத்துவதற்கான உதாரணம் பின்வருமாறு:

மனிதக் கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளி மீது வழக்குத் தொடரப் பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு வங்கி பதிவுகள் இருப்பதாக போலீசார் சந்தேகிக்கின்றனர்.

முறைசாரா ஒத்துழைப்பில் பின்வருவன அடங்கும்: காவல்துறையினர் வெளிநாட்டில் உள்ள காவல்துறையினரைத் தொடர்புகொண்டு கேள்விக்குரிய வங்கி பதிவுகள் இருப்பதை உறுதிப்படுத்தக் கோருதல் .

வங்கி பதிவுகளின் இருப்பு மற்றும் உள்ளடக்கத்தை உறுதிசெய்து பொலிஸ் குற்றவாளி மீது குற்றம் சாட்டுகின்றது.

முறையான ஒத்துழைப்பில் பின்வருவன அடங்கும்: பெறப்பட்ட வங்கி பதிவுகளுடன் தனக்கு எந்த தொடர்பும் இல்லை என்று குற்றவாளி மறுத்து வருகிறார். அதன்படி வழக்குரைஞர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு பதிவுகள் 'ஏற்றுக்கொள்ளக்கூடிய படிவத்தில்' இருக்க வேண்டும் என்ற தேவையுள்ளது.

வங்கி பதிவுகளை 'ஏற்றுக்கொள்ளக்கூடிய படிவத்தில்' பெற்றுக்கொள்ள வெளிநாட்டிற்கு அரசு பரஸ்பர சட்ட உதவி கோரிக்கையினை முன்வைக்கின்றது.

வெளிநாட்டு அரசு பதிவுகளை 'ஏற்றுக்கொள்ளக்கூடிய படிவத்தில்' வழங்குகின்றது.

உதவிக்குறிப்பு

விசாரணையின் ஆரம்பத்தில் உங்கள் மத்திய அதிகாரசபை, வழக்குரைஞர்கள் மற்றும் உங்கள் நி.உ. பிரிவுடன் கலந்தாலோசிக்கவும்.

உதவிக்குறிப்பு

தகவலுக்கான அணுகலைப் பெற்றுக்கொள்ளவும், கிடைக்கக்கூடிய தகவல்களின் வகைகளை தெளிவுபடுத்தவும், மேலதிக தொடர்புடைய தகவல்களை எவ்வாறு சிறப்பாகப் பெறுவது என்பதைக் கண்டறியவும், தகவலுக்கான எந்தவொரு முறையான கோரிக்கையையும் சிறப்பாக முன்வைக்கவும் விசாரணையின் **ஆரம்பத்தில்** முறைசாரா தகவல் பகிர்வு வழிகளைப் பயன்படுத்தவும்.

பிரிவு 7: புதிய கட்டண முறைகள்

புதிய தொழில்நுட்பங்கள் உலகெங்கிலும் மலிவான மற்றும் திறமையான கொடுப்பனவுகளுக்கான திறனை வழங்குகின்றன. இந்த முன்னேற்றங்கள் பணத்தூய்தாக்கல் அபாயங்களையும் ஏற்படுத்துகின்றன, இதில் பாரம்பரிய பணமில்லா கட்டண முறைகளுடன் ஒப்பிடும்போது அதிக அநாமதேய தன்மை காணப்படுகின்றது. புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் பரிவர்த்தனைகள் பொதுவாக ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி அமைப்புக்கு வெளியே உள்ளன. இவை பல நாடுகளில் செயல்படக்கூடும். மேலும் அவை பல்வேறு மட்டத்திலான இடத்திற்கிடம் வித்தியாசப்படும் மேற்பார்வைக்கு உட்பட்டவையாகக் காணப்படுகின்றது. இந்தக் காரணங்களுக்காக, கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் புலனாய்வாளர்கள் அவை எவ்வாறு செயற்படுகின்றன என்பதையும் அவை குற்றவாளிகளால் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதையும் அறிந்திருக்க வேண்டியது அவசியம். புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் பொதுவான கட்டண முறைகள் பின்வருமாறு:

ஸ்மார்ட் அட்டைகள் (சேமிக்கப்பட்ட மதிப்பு அட்டைகள்)
ஒரு மைக்ரோசிப் கொண்ட கடன் அட்டை போல தோற்றமளிக்கும் ஒரு பிளாஸ்டிக் அட்டை. இது பணம் செலுத்துதலுக்குப் பயன்படுத்தப்படலாம். ஆனால் இது வங்கிக் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவை மீண்டும் இணைக்காத கட்டணச் செயன்முறையை அனுமதிக்கின்றது - உதாரணமாக மீண்டும் பணம் ஏற்றக்கூடிய முன்செலுத்துகை அட்டையாக இது இருப்பதுடன் இதில் மீண்டும் அதிகபட்ச மதிப்புடன் பணத்தை ஏற்றலாம். இது இணையத்தில் பதிவு செய்யப்படாவிட்டால் பணத்தைப் போலவே கருதப்படுகின்றது. ஏடிஎம்களிலிருந்து பணத்தை எடுக்கவும் சில இணையத்தில் மற்றும் கடைகளில் பொருட்கள் வாங்குவதற்கும் இதைப் பயன்படுத்தலாம், மேலும் இது வங்கி கணக்குடன் இணைக்கப்பட்டிருப்பதில்லை.

பேபால் கொடுப்பனவுகள்
இந்த ஒன்லைன் 'டிஜிட்டல் வொலட்' ஆனது வாடிக்கையாளர்களின் கடன் அட்டை அல்லது சேமிப்பு அட்டை, வங்கி கணக்கிற்கோ மற்றும்/அல்லது பேபால் கணக்கிலிருந்து ஏனைய பேபால் பயனர்களின் கணக்குகளுக்கோ நிதிகளை மாற்றக்கூடிய பொறிமுறையாக இருப்பதுடன் வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் ஒன்லைனில் மொபைல் சாதனம் மூலமாகவோ இன்-ஸ்டோர் மூலமாகவோ (சில நாடுகளில்) பணம் அனுப்பவோ அல்லது பணம் பெற்றுக்கொள்ளவோ அனுமதிக்கின்றது.

கிரிப்டோகரன்சி (உதா. பிட்காயின்)
இது வங்கி முறைக்கு வெளியே செயற்படும் ஒரு மெய்நிகர் நாணயம் ஆகும். பயனர்கள் அடையாளம் காணும் தகவல்களைப் பகிராமல், பயனர்களிடையே நேரடியாக பரிவர்த்தனைகள் நடைபெறுகின்றன. இது ஒரு சிக்கலான பாதுகாப்புக் குறியீட்டால் பாதுகாக்கப்படும் அநாமதேய பரிவர்த்தனைகளை செயற்படுத்துகின்றது. நாணய அலகுகளை உருவாக்குவதற்கோ அல்லது பரிவர்த்தனைகளை சரிபார்க்கவோ எந்த மத்திய அதிகார சபையும் இல்லை.

மொபைல் தொலைபேசி கொடுப்பனவுகள்
மொபைல் தொலைபேசிக் கட்டணம் செலுத்தும் முறைகள், ஒரு தொலைதொடர்பு இயக்குநர் பணம் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்குபவராகவும், பணமாற்றம் மற்றும் கொடுப்பனவு செலுத்துகை என்பன தொடர்பில் அங்கீகாரம் வழங்கும் கட்டண இடைத்தரகராகவும் செயற்படுகிறார். பாரம்பரிய வங்கி சேவைகளுக்கான அணுகல் இல்லாத அல்லது குறைவாக இருக்கும் இடங்களில் இவ்வாறான பணப்பரிமாற்ற முறைமைகள் இயல்பாகக் காணக்கூடியதாக உள்ளன. இந்த கொடுப்பனவுகளில் மாற்றப்பட்ட தொகைக்கான கட்டணம் வசூலிக்கப்படலாம் அல்லது தொலைபேசி கணக்கில் முன்பே செலுத்தப்படலாம் அல்லது மதிப்பு சிம் கார்டில் சேமிக்கப்படலாம். மொபைல் போன் மற்றும் ஸ்மார்ட் சாதன தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள், ரேடியோ பிரிக்குவென்சி ஐடென்டிபிகேஷன் (ஆர்.எஃப்.ஐ.டி), நிய ஃபீல்ட் கம்யூனிகேஷன் (என்.எஃப்.சி) அல்லது ஒரு அட்டை அல்லது பாரம்பரிய வங்கி பரிமாற்றத்தைப் பயன்படுத்தாமல் இதே போன்ற தொழில்நுட்பத்தின் மூலம் பணம் செலுத்துவதற்கு இந்த சாதனங்களைப் பயன்படுத்துவதற்கான திறனைக் கொண்டுள்ளன. எப்பல் பே மற்றும் கூகிள் வாலட் ஆகியவை இந்த தொழில்நுட்பத்தின் உதாரணங்களாகும்.

இணைய வங்கி மற்றும் கொடுப்பனவுத் தேர்வுகள்
இணையத்தின் முன்னேற்றத்தின் விளைவாக, ஒரு வங்கிக் கணக்கிற்கு பணம் செலுத்துவதற்கும் அக்கணக்கிலிருந்து பணத்தை மீள எடுப்பதற்கும் அல்லது இணையத்தில் பிரத்தியேகமாக இயங்கும் வங்கி சாரா நிறுவனங்களின் கட்டண சேவைக்கு பணம் செலுத்துவதற்கும் அச்சேவையிலிருந்து பணத்தை மீள எடுப்பதற்கும் இணையத்தை நம்பியுள்ள கட்டண சேவைகள் அதிகரித்துள்ளன. இந்தச் சேவைகள் கணினிகள் அல்லது ஸ்மார்ட் சாதனங்களின் ஊடாக கடன் அட்டைகளைப் பயன்படுத்தியோ அல்லது வாடிக்கையாளரின் உரிய சிரத்தை (சி.டி.டி) மற்றும் உங்கள் வாடிக்கையாளர் கடமைகளை அறிந்து கொள்ளுங்கள் (கே.ஒய்.சி) எனும் கொள்கைகளைப் சிறிதளவே பின்பற்றும் நாடுகளில் நிறுவப்பட்டுள்ள கணக்குகளைப் பயன்படுத்தியோ பணம் செலுத்துவதற்கான அபாயத்தை அதிகரிக்கின்றன.

உதவிக்குறிப்பு

பணம் அனுப்புவதற்கான புதிய தொழில்நுட்பங்களின் பரம்பலைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். இந்த கட்டண முறைகளை விசாரிப்பதற்கான ஆலோசனைக்கு உங்கள் உ.நி பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

பிரிவு 8: உதவிக்குறிப்புகளின் சுருக்கம்

- ✓ விரிவான பணத்தூய்தாக்கல் எதிர்ப்பு சட்டத்தை உருவாக்குதல்.
- ✓ பணத்தூய்தாக்கல் மற்றும் முன்னறிவிப்புக் குற்றங்கள் ஆகியவை தொடர்பில் தனித்தனியாக வழக்குத் தொடரப்படலாம் என்பதை உறுதிப்படுத்தவும்.
- ✓ தண்டனையற்ற அடிப்படையிலான பறிமுதல் செயன்முறையினை தாபிக்கவும்.
- ✓ மனிதக் கடத்தல் உட்பட குற்றம் நிதி ஆதாயம் தொடர்பான அனைத்துச் சட்ட அமுலாக்க விசாரணைகளின் ஒரு வழக்கமான செயலின்பகுதியாக இணை நிதி விசாரணைகள் அமைவதை உறுதிசெய்ய முறையான நடவடிக்கை எடுக்கவும்.
- ✓ மனிதக் கடத்தல் நெட்வொர்க்குகளில் கடத்தலைத் தடுப்பதற்கு மீட்கப்பட்ட சொத்துகள் மற்றும் பணத்தூய்தாக்கல் குற்றங்கள் பற்றிய புள்ளிவிபரங்களைச் சேகரிக்கவும். மனிதக் கடத்தல் வழக்குகளில் உங்கள் அரசின் பதிலுக்கான செயல்திறன் குறிகாட்டிகளாக இவற்றைச் சேர்க்கவும்.
- ✓ மனிதக் கடத்தல் விசாரணையில் உங்கள் நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் ஊக்குவிப்பதற்கான 'பணப் பரிமாற்றம் பற்றிய புலனாய்வு' அணுகுமுறையை பின்பற்றுவதற்கான உயர் மட்ட ஆதரவை வழங்குதல்.
- ✓ உங்கள் உள்நாட்டு கட்டமைப்பில் பணத்தூய்தாக்கல் வழக்குகளில் பரஸ்பர சட்ட உதவி பரவலாக இருப்பதையும் பணத்தூய்தாக்கல் என்பது உங்கள் உள்நாட்டு சட்டத்தில் நாடு கடத்தப்படக்கூடிய குற்றமாகும் என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.
- ✓ முழுமையாக விசாரிக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக தொடர்புடைய அனைத்து முகவராண்மைகளையும் (புலனாய்வாளர்கள், நி.உ.பிரிவுகள் மற்றும் வழக்குரைஞர்கள் உட்பட) உங்கள் நடவடிக்கையானது ஒன்றாகக் கொண்டுவருவதை நிச்சயப்படுத்திக்கொள்ளவும்.
- ✓ உங்கள் விசாரணை முழுவதும் நீங்கள் பெற்ற நிதித் தகவல்களைக் கண்காணிக்க வழக்கு முகமைத்துவ முறையைப் பயன்படுத்தவும்.
- ✓ தகவல்களைப் பெறுவதற்காக நீங்கள் கடைபிடிக்க வேண்டிய சட்டத் தேவைகளை கருத்தில் கொள்ளுங்கள் (எ.கா. மனித உரிமைகள், தனியுரிமை, தரவு பாதுகாப்பு மற்றும் இரகசியத் தேவைப்பாடுகள்).
- ✓ உங்கள் விசாரணையின் ஆரம்பத்தில் முறைசாரா தகவல் பகிர்வு நெட்வொர்க்குகளைப் பயன்படுத்தவும். நிதி தகவல் பகிர்வு நெட்வொர்க்குகளைப் பயன்படுத்தவும். உங்கள் நாடு ஏற்கனவே ஆசியா பசிபிக் நிறுவனத்திற்கான சொத்து ஊடாடும் வலையமைப்பில் (ஏ.ஆர்.ஐ.என்- ஏ.பீ.) உறுப்பினர்களாக இல்லாவிட்டால், அவற்றில் சேர உங்கள் நாட்டை ஊக்குவிக்கவும்.
- ✓ உங்கள் விசாரணையின் ஆரம்பத்தில் உங்கள் நி.உ.பி மற்றும் உங்கள் மத்திய அதிகார சபையுடன் இணைந்து செயற்படுங்கள்.
- ✓ பணம் அனுப்புவதற்குப் பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பங்களின் வகைகள் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். இந்தக் கொடுப்பனவு முறைகளை விசாரிப்பதற்கான ஆலோசனைக்கு உங்கள் நி.உ.பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

பாலி செயன்முறை

ஆட்கடத்தல் வியாபாரம், மனிதக் கடத்தல் மற்றும்
அது தொடர்பான நாடுகடந்த குற்றங்கள் பற்றிய
பாலி செயன்முறை